மாலை தீப்பொறி
MALAE THEEPORI




புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக... டெல்லியில்

2024 ஆகஸ்ட் 1-15 தொகுதி 23 இதழ் 1

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

# 2024 ஆகஸ்ட் 1 : இடதுசாரிகள் மறியல் போர்






## சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட அனைத்து மக்களிடையேயும் அதிகரித்த அளவில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் தேவையாக உள்ளது

### பட்டியல் இன மக்களின் இடஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்த உச்ச நீதிமன்ற தீர்ப்பு : இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழுவின் தீர்மானம்

பட்டியலின மக்களில், ஒப்பீட்டளவில் விளிம்பு நிலையிலிருக்கும் சாதிகள் குறித்த அனுபவத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பட்டியலின மக்களின் ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு வழங்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆகவே, இந்த உள் ஒதுக்கீடு வழங்குவதற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு தேவையான ஒன்றாகிறது. இல்லையென்றால் பலதரப்பட்ட சாதிகளுக்கு ஒப்பீட்டளவில், வாய்ப்பு மறுக்கப்பட்டதின் அளவை மதிப்பிட எவ்வித எதார்த்த அடிப்படையும் இருக்காது. எனவே குறை பிரதிநிதித்துவமுள்ள அனைத்து குழுக்களுக்கும் அவர்களுக்குரிய, போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கும் சாதிவாரிக் கணக்கெடுப்பும் அதற்கேற்ப விகிதாசார அடிப்படையில் இட ஒதுக்கீட்டுத் சூத்திரமும் காலத்தின் கட்டாயமாகும்.

உள் ஒதுக்கீடுகளை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநில அரசாங்கங்களுக்கு இத்தீர்ப்பு வழங்கியுள்ளது. அதேவேளையில், வழக்கின் வரையறைகளைத் தாண்டிச்சென்று பட்டியலின இட ஒதுக்கீட்டுக்குள்ளேயே 'கிரீமி லேயர்' கருத்தாக்கத்தை கொண்டுவருவதற்கும் பரிந்துரைத்திருக்கிறது; ஒரு தலைமுறைக்கு மட்டுமே இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் கூறியுள்ளது.

பட்டியலின இட ஒதுக்கீடு என்பது, தலித்பழங்குடியின மக்கள் எதிர்கொள்ளும் சமூக விலக்கம், விளிம்பு நிலைக்கு தள்ளப்படுவது என்கிற தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் எதார்த்தத்தை எதிர்கொள்ளவும் அதனை மட்டுப்படுத்தவுமான ஒரு அனுசரணையான நடவடிக்கையாகும். சாதியப் பாகுபாடு கிராமப்புரங்களில் மட்டுமே இருக்கிறது; நகரமயமாக்கத்தின் காரணமாக இது குறைந்து விடும் என்ற கருத்தை முன்வைப்பது இந்திய எதார்த்தத்தை மிகப்பெருமளவுக்கு தவறாக பிரதிநிதித்துவப் படுத்துவதாகும். இங்கே, புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களிலும், ஐஐடி, ஐஐஎம் போன்ற உயர்கல்வி மையங்களிலும், மருத்துவ, பொறியியல் கல்லூரிகளிலும் பட்டியல் சமூக மாணவர்களும் ஆய்வாளர்கள்/ அறிஞர்களும் தொடர்ந்து பெரும் துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். அதிகம் வாய்பை இழந்தவர்களுக்கு அதிக நீதி வழங்குவது என்ற பெயரில் இட ஒதுக்கீட்டின் அரசமைப்புச் சட்ட அடிப்படையை கீழ்மைப்படுத்தும் எந்த ஒரு முயற்சியும் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

சமூக நீதிக்கான, சமூக சமத்துவத்திற்கான ஒரு கருவியாக அரசமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடு அதிகரித்த அளவு தாக்குதலை எதிர்கொள்கிறது; அரசமைப்புச் சட்டமும் கூட அப்படியான தாக்குதலை எதிர்கொள்கிறது. இவ்வேளையில் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட அனைத்து மக்களிடையேயும் அதிகரித்த அளவில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் நமக்கு தேவையாக உள்ளது. ஒடுக்கப்பட்ட, வாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களிடையே இன்னும் அதிகமான பிரிவினையையும் பகைமையுணர்வையும் ஊக்குவிக்க உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பே இடம் கொடுத்துவிடாமல் இருக்க வேண்டும் என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். தங்களது சமூக, பொருளாதார மேலாதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ள, அதிகாரமிக்கவர்கள், சலுகை பெற்றவர்களின் பிரித்தாளும் தந்திரத்திற்கு உதவி புரிவதாகவும் இந்தத் தீர்ப்பு அமைந்து விடக்கூடாது. ❑

மாலை தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!!

நன்கொடை தாரீர்!!!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10 : ஆண்டுச் சந்தா ரூ.200

மாலெ தீப்பொறி

இருவார இதழ்
2024 ஆகஸ்ட் 01-15
தொகுதி 23 இதழ் 1

முதன்மை ஆசிரியர்
சங்கர்.வீ

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு
பழ.ஆசைத்தம்பி
பாலசுந்தரம்
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ.இரணியப்பன்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)**

தமிழ்நாடு மாநிலக்
கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# வயநாடும் வினேஷ் போகத்தும் மோடியின் ஆட்சியும்

கடவுளின் தேசத்தில் ஒரு சிறு குழந்தை கேட்கிறது தன் அப்பாவிடம், கடவுள் ஏன் இவர்களைக் காப்பாற்றவில்லை என்று. தோண்டத் தோண்ட உடல்களாக வந்து கொண்டிருக்கின்றன வயநாட்டில். சூரல்மலை, முண்டக்கை, மேப்பாடி மூன்று கிராமங்களும் முற்றிலும் மண்ணுக்குள் புதைந்து போய்விட்டன. அந்தக் கிராமங்கள் இருந்த தடயமே தெரியவில்லை. பெரும்பெரும் பாறைகள் மட்டுமே காட்சியளிக்கின்றன. மரணங்கள் ஆயிரக் கணக்கில். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 20, 30 பேர் என மொத்த மொத்தமாக அயர்ந்து தூங்கும் நேரத்தில் புதையுண்டு போய்விட்டார்கள். சாலிஆறு 90 கி.மீ தூரத்திற்கு அப்பால் நூற்றுக்கணக்கான உடல்களை இழுத்துச் சென்று போட்டிருக்கிறது. சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் அக்கறையின்மையே இதற்குக் காரணம் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லிவிடமுடியுமா? கார்ப்பரேட்டுகளுக்காக, வணிகத்திற்காக காடுகளை அழிப்பதும் பழங்குடி மக்களை அவர்களின் வாழ் விடங்களில் இருந்து அப்புறப்படுத்துவதும் ஆட்சியாளர்களின் கொள்கைகளாலும் திட்டங்களாலும்தானே. நடந்திருப்பது மிகப் பெரிய இயற்கைச் சீற்றம். பேரழிவு. அந்த மூன்று கிராமங்களில் இனி யாரும் குடி போக முடியாது என்கிறார்கள். ஒன்றிய மோடி அரசு, இதைத் தேசியப் பேரிடர் என்று அறிவிக்க மறுக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பே நாங்கள் எச்சரிக்கை விடுத்து விட்டோம் மாநில அரசுதான் அக்கறையில்லாமல் இருந்துவிட்டது என்று அமித்ஷா வாய் கூசாமல் பொய் சொல்கிறார். ஆரஞ்சு எச்சரிக்கை மட்டுமே விடப்பட்டது என்று கேரளத்தின் முதல்வர் பினரயி விஜயன் அந்தப் பொய்யை அம்பலப்படுத்தினார். தன் கட்சியைச் சேர்ந்த நடிகரின் திருமணத் திற்காக கேரளாவிற்குச் செல்ல முடிந்த மோடியால், வயநாட்டிற்கு ஏன் வர முடியவில்லை என்று மக்கள் கேட்கிறார்கள். பிணத்தில் கூட அரசியல் செய்யும் இந்தச் சங்கிக் கூட்டதாரிடம் மனித மாண்புகளை எப்படி எதிர்பார்க்கமுடியும். பாலியல் குற்றஞ் சாட்டப்பட்ட பாஜக எம்பி பிரிஜ் பூசனை எதிர்த்துப் போராடிய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத், பாரிஸில் நடைபெறும் ஒலிம்பிக்கில் ஒரே நாளில், நடப்பு உலகச் சாம்பியன் உட்பட மூன்று பேர்களை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். நிச்சயம் தங்கப்பதக்கம் வெல்வார் என்று ஒட்டு மொத்த இந்தியாவும் எதிர்பார்த்திருந்த வேளையில், வினேஷ் போகத் தெருவில் போராடிக் கொண்டிருந்தபோது கண்டு கொள்ளாத இந்திய பிரதமர் மோடி, பதக்கம் வென்று வரும் போகத்தை வரவேற்பார் என்று எல்லாரும் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், 50 கிலோவிற்குக் கூடுதலாக 100 கிராம் இருக்கிறார் என்று ஒரே இரவில் தகுதி நீக்கம் செய்யப்பட்டு ஒலிம்பிக் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார். வினேஷ் போகத் தான் இனி குத்துச் சண்டை போட்டிகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். கென்யா வீராங்கனை ஒருவர் தகுதி நீக்கம் செய்யப்பட்ட போது, கென்யா அரசு ஒலிம்பிக் கமிட்டியிடம் மேல்முறையீடு செய்து வாதாடி, தகுதி நீக்கத்தை ரத்து செய்தது. ஆனால், வினேஷ் போகத் விசயத்தில் பெயரளவுக்கு மட்டுமே மேல்முறையீடு செய்துள்ளது இந்திய ஒலிம்பிக் கமிட்டியும் அரசும். அந்த மேல்முறையீட்டையும் கிடப்பில் போட்டுவிட்டது. அது மட்டுமின்றி வினேஷ் போகத்தின் தகுதி நீக்கம் சரிதான் என்று வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் பாஜகவினர். இதிலிருந்தே தெரிகிறது இந்தியாவின் தங்க மங்கையாக வினேஷ் போகத் வந்து இறங்கிவிட்டால் நிலைமை என்னவாகும் என்று நினைத்துப் பார்த்ததால்தான் இப்படியொரு தகுதி நீக்கம் நடந்திருக்குமோ என்று மக்கள் சந்தேகிப்பதில் உண்மை இல்லாமல் இல்லை. பாசிச பாஜக சங்கிகளுக்கு மனித உயிர்களும் பெரிதல்ல, நாட்டின் மாண்பும் பெரிதல்ல என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. ❑




**தோழர் சாருமஜூம்தார் நினைவு நாளான ஜூலை 28, 2024 தியாகிகள் நாள் அன்று மதுரையில் இகக(மாலெ) மாநில ஊழியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி தலைமை தாங்கினார். இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் வீ.சங்கர், மத்தியக் குழு உறுப்பினர்கள் பாலசுந்தரம், சந்திரமோகன், ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் சங்கரபாண்டியன், புரட்சிகர இளைஞர் கழக மாநிலத் தலைவர் சுந்தர்ராஜ், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநில அமைப்பாளர் ரேவதி, அகில இந்திய மாணவர் கழக மாநிலப் பொறுப்பாளர் சுந்தர் உட்பட மாநில கமிட்டி உறுப்பினர்கள், மாவட்ட கட்சி அமைப்பின் உறுப்பினர்கள், வெகுமக்கள் அமைப்பின் மாநில தலைவர்கள், மற்றும் இதர முக்கிய ஊழியர்கள் கலந்து கொண்டனர். ஊழியர் கூட்டத்தில் எதிர்கால வேலைத் திட்டமும் கடமைகளும் முன்வைக்கப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.**

இன்றைய மதவெறி பாசிச ஆட்சிக்கெதிரான மக்கள் போராட்டங்களை வலுப்படுத்திடும் வகையில் முதல் கட்டமாக கட்சி அமைப்புகளைத் துடிப்புமிக்கதாக ஆக்கிடவேண்டும். புதியவர்களை, குறிப்பாக மாணவர், இளைஞர், பெண்களை அனைத்து மட்ட கமிட்டிகளிலும் இணைப்பது, துடிப்பான செயலாளர்களை, குறிப்பாக கிளை மற்றும் உள்ளூர் கமிட்டி மட்டத்தில் உருவாக்கி முன்னேறிட வேண்டும்.

## மக்கள் சந்திப்பு இயக்கம்

கட்சியின் வெகுமக்கள் அடித்தளத்தை விரிவுபடுத்தும் நோக்கில், வெகுமக்கள் அமைப்பு களை முறைப்படுத்துவதற்கான சிறப்பு முயற்சியாக மக்கள் சந்திப்பு இயக்கம் ஆகஸ்ட் 1 முதல் செப். 13 தோழர் சுப்பு நினைவு நாள் வரை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தக் காலகட்டத்தில், கிராமப் புறங்களில் சிறப்பு பயணங்கள் கிராமம் கிராமமாக, வீடுவீடாக சென்று மக்களைச் சந்திப்பது, அவர்கள் குறைகள், கோரிக்கைகளைக் கேட்டறிவது, மக்களோடு மக்களாகத் தங்கியிருந்து பணியாற்றி இந்த இயக்கம் நடத்தப்பட வேண்டும்.

## மக்கள் போராட்ட இயக்கம்

செப் 15 முதல் அக்டோபர் வரை மக்கள் கோரிக்கைகள் மீதான ஒன்றிய அளவிலான மிகவிரிவான பரப்புரை இயக்கங்கள், அதன் நிறைவாக போராட்ட இயக்கங்கள் நடைபெறும். இந்த காலத்தில், வெகுமக்கள் அமைப்புகள் தலைமையில் தீவிர போராட்டங்களைக் கட்டமைத்து பெரும் எண்ணிக்கையில் பரந்த மக்களை அணி திரட்டிட வேண்டும். தனிநபர் பிரச்சனைகளுக்குப் பதிலாக, பரந்த மக்கள் கிளர்ச்சிக்கான கோரிக்கைகள் மீது இயக்கம் கட்டமைப்பது அன்றாட நடைமுறை யாக மாற வேண்டும். அதன் மூலம் கட்சி உறுப்பினர் பலமும் அதிகரிக்கும்.

கட்சி வர்க்க முரண்பாடு கூர்மையாக உள்ள பிரச்சனைகளைக் கையிலெடுத்தபோதெல்லாம் பெரும் வளர்ச்சியையும் ஒரு போராட்ட இயக்கம் எனும் அடையாளத்தையும் பெற்றிருக்கிறது. அதில்

விவசாயத் தொழிலாளர்களின் கூலி, நிலம், சுயமரியாதை போன்ற பிரச்சனைகள் மிகப்பெரும் பங்காற்றி இருக்கின்றன. நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் மையப் புள்ளிகளாக அவை அமைந்திருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களின் சுயமரியாதைப் போர் என்பது பல்வேறு அவதாரங்களை இன்று மேற்கொண்டிருக்கின்றன. கோவில் நுழைவுப் போராட்டங்கள் முதல் சாதியாதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் வரை பல பரிணாமங்களைப் பெற்றிருக்கின்றன. அத்தகைய பல போராட்டங்களை கட்சி முன்னின்று நடத்தி இருக்கின்றது. நிலம் இன்னமும் முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. அதில் வீடு, வீட்டு மனை குறித்த பிரச்சனைகள், குத்தகை பிரச்சனைகள் போன்றவை முக்கிய பிரச்சனைகளாக முன் வந்துள்ளன. வீடு பிரச்சனையானது விவசாயத் தொழிலாளர் மட்டுமல்ல, தொழிலாளர்களும் கிளர்ந்தெழத்தக்க பிரச்சனையாக மாநிலம் முழுவதும் உருவெடுத்திருப்பதைக் காணமுடிகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு நூறு நாள் வேலைக்கான கூலியை அதிகரிக்க வேண்டும் என கோரிக்கை இருக்குமானால், தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலியை அதிகரிப்பது முக்கிய பிரச்சனையாக இருக்கிறது. இப்போது, அத்தகைய கோரிக்கை களோடு கூட, மாவட்டத்தில், ஒன்றியத்தில் பற்றி எரியக்கூடிய பிரச்சனை என்ன என்பதை மறுபார்வைக்கு உள்ளாக்கி அனைத்து மக்களையும் ஈர்க்கும் அத்தகைய கோரிக்கைகளைக் கண்டறி வதில் பெறும் வெற்றிதான் பரந்த வெகுமக்களை அணி திரட்ட வல்லதாக, மக்கள் போராட்டங்களை வெற்றி பெறச் செய்வதாக இருக்கும்.

## புதிய ஒன்றியங்களில் பரப்புரை / போராட்ட இயக்கம்

கட்சி கவனம் குவிக்கும் பகுதிகளில் ஒன்றிய மட்டப் போராட்டங்களை அக்டோபருக்குள் நடத்திடவும் நவம்பர், டிசம்பர் மாதங்களில், ஒவ்வொரு மாவட்டங்களிலும், புதிய ஒன்றியத்தில் வேலைகளைத் துவங்கவும் வேண்டும்.

அதனைத் தொடர்ந்து அனைத்திந்திய விவசாய, கிராமப்புறத் தொழிலாளர் சங்கத்தின் மாநில மாநாடு ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் நடத்தப்படும். ஏஐசிசிடியு அமைப்பின் வெகுமக்கள் செல்வாக்கை, தொழிலாளர் அடித்தளத்தை விரிவுபடுத்தி அகில இந்திய மாநாட்டு வேலைகளை வெற்றிகரமாக்க வேண்டும். இந்த இயக்கப் போக்கில், மக்கள் கோரிக்கை இயக்கத்தின் கோரிக்கைகளை வென் றெடுக்க தொடர் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும். பின்னர் மாவட்ட மட்டத்திலும் பெருந்திரள் போராட்டங்களை நடத்திட வேண்டும்.

அனைத்து முயற்சிகளும் போராட்டங்களும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்கான அரசியல் பார்வையையும் தயாரிப்பையும் மனதில் கொண்டு செய்யப்பட வேண்டும். அந்த வகையில் வெகுமக்கள் மத்தியிலான நமது அரசியல் செல்வாக்கை அதிகப்படுத்துவது, வெகுமக்கள் அடித்தளத்தை விரிவுபடுத்துவது என்பதை தீர்மானகரமாகக் கொண்டு செயலாற்றிட வேண்டும்.

கட்சி உறுப்பினர்கள் 1000க்கும் மேல் இருக்கும் மாவட்டங்களில், ஒன்றிய, பகுதிப் போராட்டங் களில் நவம்பருக்குள் 3000 பேரைத் திரட்டுவது நமது இலக்காக இருக்க வேண்டும். கட்சி உறுப்பினர்கள் 500 முதல் 1000 வரை இருக்கும் மாவட்டங்களில் குறைந்தபட்சம் 2000 பேரைத் திரட்டுவதை இலக்காகக் கொள்ள வேண்டும். 500க்கும் குறைவாக இருக்கும் மாவட்டங்களில் 1000 பேருக்கு குறை யாமல் அணிதிரட்டி பெருந்திரள் போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும். அந்த அணிதிரட்டல்களில் மாவட்டம் முழுவதுமிருந்து தோழர்கள் கலந்து கொள்ள வேண்டும். அதேவேளை 60-70 சதவீதத்திற்கும் மேல் ஒன்றியம் அல்லது பகுதிக்குள்ளிருந்து திரட்டப்பட வேண்டும்.



# நாங்கள் எங்களின் சுதந்திரத்தைப் போற்றி வந்தோம்

**(சிபிஐ எம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர் சிறப்புப் பேட்டி பிடிஐ யின் 4 நாடாளுமன்றத் தெரு â¡ ø «êù L ™ ª õOõ%¶&Ý ƒAô «ð†®: https://youtu.be/lLnosZxjpXw தமிழாக்கம்: மதிவாணன்)**



**பேட்டியாளர்: திபங்கர் ஜி, பிடிஐயின் நேர்காணலுக்கு வந்தமைக்கு நன்றி. தங்களின் கட்சி பற்றியும் கட்சியில் நீங்கள் பயணித்த பாதை குறித்தும் சற்று பேசுவோமா? உங்கள் கட்சி லெனினின் பிறந்த நாளில் நிறுவப்பட்டது. நீங்கள் கட்சியோடு தொடர்பு கொள்வது எப்படி நிகழ்ந்தது?**

**திபங்கர்:** லெனின் பிறந்த நாளில்தான் கட்சி நிறுவப்பட்டது. ஆனால், மே மாதம், 1967 ஆம் ஆண்டு நிகழ்ந்த நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியின் விளைவாக 1969ல் கட்சி அமைப்பாக்கப்பட்டது. கட்சி என்ற ஒன்று வேண்டுமா? வேண்டாமா? கட்சிக்கான காலம் கனிந்துவிட்டதா? இல்லையா? ஒரு விதமான தளர்வான ஒருங்கிணைப்பு போதும்தானே? என்ற விவாதங்கள் நடந்துகொண்டிருந்தபோது கட்சி நிறுவப்பட்டது.

மாணவனாக இருந்தபோது, 19791980 காலத்தில் கட்சியோடு நான் சேர்ந்து பணியாற்றத் துவங்கினேன். ஆனால், அதற்கு ஒரு பின்னணி இருந்தது. எனது தந்தை ரயில்வேயில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அப்போது (மேற்கு வங்கத்தின்) டார்ஜிலிங் (மாவட்டத்தில்) நக்சல்பாரி எழுச்சி நடந்துகொண்டிருந்தது. அப்போது நாங்கள் அருகாமையில் இருந்த அலிப்பூர்துவாரில் இருந்தோம். இப்போது அலிப்பூர்துவார் தனி மாவட்டம் ஆகிவிட்டது. 1967ல் நக்சல்பாரி நிகழ்ந்துகொண்டிருந்தபோது நான் ஒன்றாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அப்போது பெருமளவு சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். அதில் நக்சல்பாரி முழக்கங்கள் எழுதப்பட்டிருக்கும். அவை எனக்குள் பல கேள்விகளை எழுப்பின. எதுவும் எளிதில் மனதில் பதிந்துவிடும். அதனால், நான் என் தந்தையோடு நிறைய விவாதம் செய்தேன்.

**என்ன? அந்த வயதிலா?!**

ஆமாம், ஐந்து, ஆறு, ஏழு, எட்டு வயதுகளின்போது நான் பள்ளி செல்லும்போதெல்லாம் சுவற்றில் எழுதியிருந்தவற்றைப் படிப்பேன். அந்த பெரிய சுவர் எழுத்துகள் 70களை விடுதலையின் பத்தாண்டுகள் ஆக்குவோம் என்று முழங்கின. 1972ல் இந்தியா தனது சுதந்திர தின வெள்ளிவிழாவை நடத்திக்கொண்டிருந்தது. அப்படியிருக்கும்போது இந்தியாவை எதிலிருந்து விடுவிக்கப் போகிறார்கள் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. நாம் விடுதலை பெற்ற நாட்டில்தானே இருக்கிறோம் என்று நான் யோசித்தேன். மறுபடியும் ஏன் இந்தியாவை விடுதலை செய்ய வேண்டும்? என் தந்தை என் கேள்விகளை எதிர்கொண்டு பதில் சொல்வார். எங்களுக்கு இடையே அரசியல் விவாதம் நடக்கும். அரசியல் விவாதம் செய்யக்கூடாது என்று என்னை அவர் ஒருநாளும் தடுத்ததில்லை. இவ்வாறான அரசியல் விவாதங்களை நாங்கள் என் சிறுபிராயத்தில் செய்துவந்தோம். அந்த நினைவு எனக்கு இருக்கிறது.

அதன்பின்பு 1974ல் நரேந்திரபூர் ராம்கிருஷ்ண மிஷனுக்கு நான் வந்து சேர்ந்தேன். அது ஓர் உறைவிடப் பள்ளியாகும். அங்கே சூழல் மிகவும் வேறுபட்டதாக இருந்தது. அவசரநிலை அறிவிக்கப்பட்டிருந்தது. பத்திரிகைகள் கிடைப்பதில்லை. அவசர நிலை முடிவுக்கு வந்த பின்தான் என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியவந்தது.

1979ல் நான் இந்திய புள்ளியியல் கழகத்தில் சேர்ந்தேன். என் வாழ்வைத் தீர்மானிக்கும் ஆண்டாக 1977 இருந்தது. ஜனநாயகம் மீட்டெடுக்கப்பட்டது. நாம் நமது ஜனநாயகத்தை மீட்டெடுத்துவிட்டோம் என்ற உணர்வு அப்போதிருந்தது. அரசியல் கைதிகளை மீட்டெடுக்க வேண்டும் என்று இயக்கம் நடந்தது. பியுசிஎல், பியுடிஆர் என்று சிவில் உரிமை இயக்கங்களும், ஏகப்பட்ட சுற்றுச்சூழல் இயக்கங்களும் நாங்கள் படித்த புள்ளியியல் கழகத்தில் நடைபெற்றன. அது மிகவும் சிறிய இடம். சிறிய அளவிலான மாணவர்களே இருந்தார்கள். அங்கே இடதுசாரி, தாராளவாத வகைப்பட்ட ஒரு சூழல் இருந்தது. அப்போதே நான் முடிவு செய்துவிட்டேன்... இதுபோன்ற ஒன்றைத்தான் நான் செய்யப் போகிறேன் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டிருந்தது.

பீகாரிலிருந்து ஏகப்பட்ட செய்திகள் வந்துகொண்டிருந்தன. தோழர் நாகபூஷன் பட்நாயக்கின் விடுதலைக்காக நாங்கள் போராடிக்கொண்டிருந்தோம். சில அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தோழர் நாகபூஷன் விடுதலைக்காக ஒரு கமிட்டி இயங்கிக்கொண்டிருந்தது. இப்படித்தான் அப்போது வாழ்க்கை இருந்தது. அதாவது நான் ஒரு மாணவனாக இருந்தபோதும், 79 முதல் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தேன். 1984ல் எனது பட்டத்தைப் பெற்றேன். ஆனால், அந்த சமயத்தில் நான் கட்சியின் முழு நேர ஊழியன் போலச் செயல்பட்டுக்கொண்டிருந்தேன்.

**ஓகே. சுவையாகத்தான் இருக்கிறது. இப்போது நீங்கள் சிபிஐஎம்எல்லில் இருக்கிறீர்கள். உங்கள் கட்சிக்கு 2 எம்பிகள் இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் மூன்று எம்பிகளைப் பெற்றிருந்திருக்க வேண்டும். ஆனால், நாளந்தாவில் தோற்றுவிட்டீர்கள்...**

ஆமாம். அது உண்மைதான். நாங்கள் கொடர்மாவிலும் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்த்தோம். ஆனால், தேர்தல் முடிவுகள் ஆச்சரியப்படும் அளவிற்கு இருந்தன. சொல்லப் போனால், ஏமாற்றமளித்தன. நாங்கள் அதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாங்கள் 'இந்தியா' அணியின் சார்பில் 4 இடங்களில் போட்டியிட்டோம். அவற்றில் 3 பீகார். ஒன்று ஜார்கண்ட்.

**இருபதாண்டுகள் கழித்து நீங்கள் 2 எம்பி இடங்களில் ஜெயித்துள்ளீர்கள்...**

ஆமாம். 2 எம்பிகளையும் எப்படி மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவது என்று நாங்கள் பரிசீலித்துக்கொண்டுள்ளோம். இரண்டு எம்பிகளும் இரண்டு முறை எம்எல்ஏக்களாக பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய பத்தாண்டுகள் அனுபவம் இருக்கிறது. இருவருமே விவசாயிகளின் தலைவர்கள். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவசாயப் போராட்டத்தில் கடந்த 3 அல்லது 4 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இது ஒரு வகையில் பார்த்தால் விவசாயிகள் இயக்கத்தின் வெற்றியாகும். எனவே, நாங்கள் அந்த அரங்கில் எதையாவது செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால், பீகாரின் விவசாய இயக்கம் பஞ்சாப், ஹரியாணா, மேற்கு உபியின் விவசாயிகள் இயக்கத்திலிருந்து மாறுபட்டது. நாங்கள் இது விஷயத்தில் ஏதேனும் செய்வோம்.

**நாடாளுமன்றத்தில் உங்கள் கட்சியின் பிரதிநிதிகள் மறுபடியும் நுழைந்திருக்கின்றனர். மேற்கு வங்கத்தில் இடதுசாரிகள் தொடர்ந்து வீழ்ச்சியைச் சந்தித்துக்கொண்டிருக்கும்போது இது நடந்துள்ளது. உங்களின் தோழமை கட்சியான சிபிஐ எம் கேரளாவில் ஆட்சியில் உள்ளனர். இருந்தபோதும், ஒன்றும் பெரியதாகச் செய்துவிட முடியவில்லை. இப்படியான நிலையில் இடது முன்னணி இருப்பதற்கான சரியான காரணம் என்ன? மற்ற இடதுசாரி கட்சிகளுடன் ஒப்பிடும்போது உங்கள் அணுகுமுறை எவ்வாறு மாறுபட்டதாக இருக்கிறது?**

இந்த கேள்வி பலரும் கேட்கும் கேள்விதான். பல சமயங்களிலும் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. ஆனால், கேள்விக்கான பதிலைச் சொல்வது மிகவும் கடினமானது. (சிரிக்கிறார்) ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு நிலைமை உள்ளது. சரியா? உதாரணமாக மேற்கு வங்கத்தில் இடதுசாரிகள் 34 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார்கள். மேற்கு வங்கத்தில் இடது முன்னணி ஆட்சியில் இருந்தபோது நாங்கள் ஒருபோதும் அதில் அங்கம் வகிக்கவில்லை. நாங்கள் எங்களின் சுதந்திரத்தைப் போற்றி வந்தோம்.

**தொடரும்...**

# மின் கட்டண உயர்வு திரும்பப் பெற வேண்டும்! ஒன்றிய அரசின் உதய் மின் திட்டம் முறியடிக்கப்பட வேண்டும்!

–அ.சந்திரமோகன்

## தமிழ்நாட்டில் மின்கட்டண உயர்வு :

கடந்த ஜூலை 15 ல், தமிழ்நாட்டில் மின்கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டது. வீடுகளுக்கான மின் இணைப்பில் மின் கட்டண உயர்வை தமிழ்நாடு மின்சார வாரிய ஒழுங்கு முறை ஆணையம் அறிவித்தது. ஏற்கனவே யூனிட் ஒன்றுக்கு ரூ. 4.60 ஆக பெறப்பட்டது, தற்போது ரூ. 4.80 ஆக உயர்த்தப்பட்டது; 401 யூனிட் முதல் 500 யூனிட் வரை பயன்படுத்துவர்களுக்கு ரூ. 6.45 ஆகவும், 501–600 யூனிட் வரை, ரூ. 8.15 ஆக பெறப்பட்டது 8.55 ஆகவும், 801–1000 யூனிட் வரை பயன்படுத்துபவர்களுக்கு, ஏற்கனவே ரூ.10.20 பெறப்பட்டது ரூ.10.70 ஆகவும், 1000 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்துபவர்களிடம் ஏற்கனவே ரூ.11.25 பெறப்பட்டது ரூ.11.80 ஆகவும் உயர்த்தப்பட்டது. ஜூலை 1ம் தேதி முதல் இவை அமலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதனால், பொதுமக்கள், சிறு வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. மற்றொரு புறம், தொழிற்சாலைகளுக்கான நிலையானக் கட்டண உயர்வு ( Fixed Charge) கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு படிநிலைகளாக அதிகரித்தப் பின்னணியில், தற்போதைய இந்த மின் கட்டண உயர்வு, நிலையானக் கட்டண உயர்வு மேலும் அதிகரித்து சிறு, குறு தொழில்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் உருவாகியுள்ளது.

திமுக அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தொடர் நிர்ப்பந்தங்கள் காரணமாக, கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்று முறை மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது. 'மத்திய அரசின் நிதியைப் பெற ஆண்டுக்கு ஒருமுறை மின் கட்டணம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்' என்ற மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி மின் கட்டணம் உயர்த்தப்பட்டு இருப்பதாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தெரிவித்து இருக்கிறது. மேலும், தொடரும் மின்வாரிய நட்டத்தை குறைக்கவும், தனியார் மின்சாரத்தை வாங்குவதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யவும் இத்தகைய கட்டண உயர்வு தவிர்க்க இயலாது எனவும் தெரிவித்தது.

அதானியிடம் இருந்து ரூ.6000 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலக்கரி இறக்குமதி செய்ததில் ரூ. 300 கோடி ஊழல் மற்றும் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கியதில் ரூ.400 கோடி ஊழல் போன்ற பல்வேறு ஊழல்கள்தான் தமிழ்நாடு மின்வாரிய நட்டத்திற்கு காரணம் எனவும் மற்றொரு புறம் விவாதிக்கப்படுகிறது.

## உதய் மின் திட்டமும், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையமும்

மின்விநியோகம் மொத்தத்தையும் கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு கையளிக்க, மோடி அரசாங்கம் தான் உதய் UDAY [ Ujwal DISCOM Assurance Yojana ] திட்டத்தை கொண்டு வந்தது. மின்சாரத்தை சந்தை விலையில் விற்பது இதன் அடிப்படை கொள்கை ஆகும்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது உதய் திட்டத்தை தொடர்ந்து எதிர்த்து வந்தார். ஆனால், ஜெயலலிதா மறைவுக்குப் பிந்தைய குழப்பமான அரசியல் சூழலில், ஓ.பன்னீர்செல்வம் முதலமைச் சரான அதிமுக ஆட்சியில் தான், 2017ல் உதய் திட்டத்தில் தமிழ்நாடு இணைந்து கொள்ள அதிமுக அரசாங்கம் சார்பில் அமைச்சர் மா.ஃபா பாண்டியராஜன் கையெழுத்திட்டார். அதற்குப் பிறகு முதலமைச் சரான எடப்பாடி பழனிசாமியும் உதய் மின் திட்டத்தை எதிர்க்கவில்லை.

உதய் மின் திட்டத்தின் கீழ் உள்ள மாநில அரசுகள், அவ்வப்போது மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தெரிவிக்கும் போதெல்லாம் மின் கட்டணத்தை திருத்த / உயர்த்த வேண்டும்.

உதய் திட்டத்தின் அடிப்படையில், ஒவ்வொரு நாள் மின் கட்டணம் கணக்கீடு செய்வதில் "பீக் அவர் ரேட்" என்ற அம்சமும் உள்ளது. உதாரணமாக, அதிக மின் நுகர்வு செய்யப்படும் மாலை 6 மணி முதல் 10

மணி வரை பீக் அவர் / Peak Hours என கணக்கிடப்படலாம்; கோடை காலத்தில் இந்த பீக் அவர் என்பது, மாலை 6 முதல் இரவு 2 மணி வரை கூட கணக்கிடப்படுகிறது. ஏற்கெனவே, மின் விநியோகம் ரிலையன்ஸ், டாடா போன்ற தனியார் கார்ப்பரேட் கம்பெனிகள் வசமுள்ள சில மாநகரங்களில், பீக் அவர் ரேட் முறையில் மின் கட்டணம் வசூலிக்கப் படுகிறது. தன்னிறைவு மின் உற்பத்தி இல்லாத மாநிலங்கள், தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடம் மின்சாரம் கொள்முதல் செய்யும் பொழுது, அந்த நிறுவனங்கள், அன்றன்று நிலவும் மின்சார டிமாண்ட்டிற்கு ஏற்ப மின்சார விலையை உயர்த்தி விற்கின்றன. கார்ப்பரேட் மின்சார கம்பெனிகளின் கொள்ளை இலாபத்தை நுகர்வோர் தலையில் கட்டவே, 'மின்வாரிய நிதி சுமையை ஈடுகட்ட 'பீக் அவர் ரேட்' என்ற பெயரால் வசூலிப்பது நியாயப்படுத்தப் படுகிறது. ஸ்மார்ட் மீட்டர் வைப்பது முழு நிறைவான பிறகு தமிழ் நாட்டிலும் கூட பீக் அவர் ரேட் அமலாக்கப்படலாம்.

கார்ப்பரேட் நிறுவனங்கள் மின்துறையை சூறையாட வழிவகுக்கும் மத்திய அரசின் உதய் மின் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு மின்வாரியம் இணைந்த பிறகு, மின் உற்பத்தி விநியோகம் ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு சுதந்திரமாக செயல்பட இயலாத நிலை உருவாகிவிட்டது. மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அதன் கிளையான மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் போடும் உத்தரவுகளை அமலாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில், தனியார் கார்ப்பரேட் பெருமுதலாளிகளிடம் மின்சாரம் கொள்முதல் செய்வதே மாநில மின்வாரியங்கள் நிதிநெருக்கடி மற்றும் கடன் சுமைக்குள்ளாவதற்கு காரணம் ஆகும். உதாரணமாக, அரசு சார் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி செலவு யூனிட்டுக்கு 3 ரூபாய் ஆகிறது என்றால், தனியார் முதலாளிகளிடம் ரூ. 5 ல் துவங்கி ரூ.12 வரை வாங்குகிறோம். அதேபோல, காற்றாலை, சூரிய ஒளி / சோலார் மின்சாரம் யூனிட்டுக்கு ரூ.7 முதல் ரூ.12 வரை வாங்குகிறோம். இவற்றுக்கு தீர்வு காண, தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளிடம் மாநில மின் தன்னிறைவு கொள்கை இல்லை.

## மின் உற்பத்தியில் கார்ப்பரேட் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கிறது:

அனல் மின் உற்பத்தியில், தொடர்ச்சியாக கார்ப்பரேட் கம்பெனிகள் அதிகரித்து வருகிறார்கள். அம்பானி, அதானி, வேதாந்தா போன்ற கார்ப்பரேட் நிறுவனங்கள் அனல் மின்சார உற்பத்தியில் பெரும் சக்திகளாக உருவாகியுள்ளன. நிலக்கரி சுரங்கங்கள் பலவும் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டுவிட்டன. மின் உற்பத்தியில் தனியார் பங்கு உயர்ந்து செல்கிறது.

தற்போது, புதுப்பிக்கவல்ல மாற்று எரிசக்தி எனப்படும் காற்றாலை மின்சாரம் மற்றும் சூரிய ஒளி மின்சாரம் இரண்டு துறையிலும் ஏகபோக சக்திகளாக கார்ப்பரேட் மின் நிறுவனங்கள் திகழ்கின்றன. பசுமை சக்தி என்ற பெயரில், இந்த "புதுப்பிக்கவல்ல மாற்று எரிசக்தி" நிறுவனங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் மானியமாகவும், வரிச் சலுகைகளாகவும் அள்ளி இறைக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் கடந்த அதிமுக ஆட்சியில், சுமார் 20,000 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள தனியார் காற்றாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல, சூரிய ஒளி மின் உற்பத்தி நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

## ராமநாதபுரம் அதானி சோலார் திட்டம் : ஏன் இந்த நிலை?

தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் சுமார் 35 % மட்டுமே அரசு சார் நிறுவனங்கள் உற்பத்தி செய்கிறது. மீதியை தனியார் மின் நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்கிறது. கார்ப்பரேட் வளர்ச்சி பாதையில் மோடி அரசாங்கம் வேகமாகப் பயணம் செய்வதால், மாநிலங்களில் மின் தன்னிறைவு கொள்கைகளை அமலாக்க இயலவில்லை.

1) உதய் மின் திட்டம், மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் இருந்து அரசு சார் நிறுவனங்களை அகற்றும் விதிமுறைகள் வைத்திருப்பதால், மாநில அரசுகள், புதியதாக அனல் மின் நிலையங்கள் அமைக்க ஒன்றிய அரசு அனுமதிப்பதில்லை. இதை மீறி, மாநில அரசுகள் மின் உற்பத்தி திட்டங்கள் அமைக்க விரும்பினால், தங்களுடைய சொந்த பொறுப்பில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதி முதலீட்டை உருவாக்கி கொள்ள வேண்டும் ; அல்லது வெளிநாட்டு கடன் உதவிகளை பெற வேண்டும். மாநில அரசுகள் இத்தகைய நிதி கடன் சுமைகளை ஏற்க விரும்புவதில்லை.

2) தமிழ்நாட்டில் உள்ள மாற்று எரிசக்தி உற்பத்தியில், தமிழ்நாடு அரசு சார் நிறுவனங்கள் ஒன்றுகூட இல்லவே இல்லை. ஏற்கெனவே

நடைமுறையில் செயல்படும் சுமார் 20,000 மெகாவாட் உற்பத்தி திறனுள்ள காற்றாலை மின்சாரம் மற்றும் 2024ம் ஆண்டுக்கு இலக்கு தீர்மானிக்கப்பட்ட தினசரி 20,000 மெகாவாட் சூரிய ஒளி / சோலார் மின்சார உற்பத்தி ஆகியவை எல்லாம் தமிழ்நாடு அரசின் மின் உற்பத்தியாக இருந்தால் மின் உற்பத்தி செலவு குறையும்.


சில நூறு கோடி ரூபாய் முதலீட்டின் அடிப் படையில் அமைக்க வாய்ப்புள்ள காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின் உற்பத்தியில் அரசு மின் உற்பத்தி நிறுவனங்கள் அமைக்கப்பட்டால், , குறைந்த கட்டணத்தில் மின் விநியோகம் செய்ய இயலும்; கட்டண உயர்வையும் தவிர்க்க இயலும். ஆனால், இவை குறித்து தமிழ்நாடு அரசாங்கம் கொள்கை முடிவுகள் எடுக்கவில்லை.

மாறாக, மாற்று எரிசக்தி உற்பத்தியில் தனியார் வளர்ச்சிக்கு பேராதரவு வழங்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின், டான்ஜெட்கோ ஜிகிழிநிணிஞ்சிளி நிறுவனத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி தெர்மல், தமிழ்நாடு மின் உற்பத்தி கிரீன் எனர்ஜி மற்றும் தமிழ்நாடு மின் விநியோகம் என மூன்றாக பிரித்துள்ளது. கிரீன் எனர்ஜி துறைக்கு ஒதுக்கப்படும் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மானியங்கள் சிந்தாமல் சிதறாமல் கார்ப்பரேட் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு செல்வதை உறுதி செய்துள்ளது.

3) தமிழ்நாட்டின் நீர் மின் நிலையங்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவாகும் ஆறுகள் மற்றும் காவிரி ஆற்றை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டவை ஆகும். நீலகிரி மலையில் உருவாகும் மழைப்பொழிவும், கர்நாடகத்தில் இருந்து பாயும் காவிரி நீர் வரத்தும் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட காலங்களில் மட்டுமே தண்ணீர் வரத்து தங்கு தடையின்றி இருப்பதால், இவற்றை அடிப் படையாகக் கொண்டு கட்டப்பட்ட அணைகளின் குறுக்கே கட்டப்பட்ட நீர்மின் நிலையங்களின் உற்பத்தி திறனை அதிகரிக்க இயலவில்லை.

## மின்சார திருத்த மசோதா 2023 மற்றொரு பேராபத்து

இந்தச் சட்ட மசோதா, மின்சார உற்பத்தி மற்றும் விநியோகத்தை மொத்தமாக தனியார்மயமாக்க, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு விற்பதற்கு வழிவகுக்கிறது. உதய் மின் திட்டத்தின் கீழ் இருக்கும் போதே, இத்தகைய நிலை என்றால்,



'மின்சார சட்டத் திருத்த மசோதா 2023' சட்டமாக்கப்பட்டால் தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் நுகர்வோர் படுமோசமான நிலைக்குத் தள்ளப்படுவர்.

மின்சார திருத்த மசோதா 2023ல், "மின் பகிர்மானம்/விநியோகம், மின் கட்டணம், மின் உற்பத்தி" ஆகியவற்றில், நாடு முழுவதும் ஒரே கொள்கைத் திட்டம் கொண்டு வர முடிவு செய்யப்பட்டுள்ளது. மாநிலப் பட்டியலில் உள்ள மின்சாரம், மத்திய பட்டியலின் பிடிக்குள் சென்றுவிடும்; மின் கட்டணங்களை தீர்மானிப்பது முதல் இலவச மின்சாரம் வழங்குவது வரையிலான மாநில அரசின் அதிகாரங்களுக்கு முடிவு கட்டப்படும். கார்ப்பரேட் மின்சார முதலாளிகளின் கொள்ளை கொடிகட்டிப் பறக்கும்.

## தீர்வு என்ன?

தமிழ்நாட்டில், நீர்மின் உற்பத்தி திறனை அதிகரிக்க முடிந்தால், மாற்று எரிசக்தி மின் உற்பத்தியில் அரசு நிறுவனங்கள் துவக்கப்பட்டால், துவக்கியபிறகும் பல்லாண்டு காலமாக செயல்பாட்டுக்கு வராத சில அரசு சார் அனல் மின் நிலையங்கள் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டால், தமிழ்நாடு தன்னிறைவு நோக்கி முன்னேற இயலும்.

மற்றொரு புறம், மாநில மின் வாரியத்தின் தன்னாட்சியை மீட்க, தமிழ்நாடு உதய் திட்டத்தில் இருந்து வெளியே வரவேண்டும் ; உதய் திட்டத்தை திரும்பப் பெற அனைத்து மாநில அரசுகளும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

அதோடு கூட, மின்சார திருத்த மசோதா 2023ஐ சட்டமாக்க மீண்டும் மோடி 3.0 அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டும். ❑

# திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டுகளும், இடது ஜனநாயக மாற்றின் தேவையும்

மு.இராமச்சந்திரன்

சென்ற இதழின் தொடர்ச்சி...

“மனுக்கள் என்பது வெறும் காகிதம் அல்ல. அது ஒரு மனிதனின் வாழ்க்கை, கனவு, எதிர்காலம். நியாயமாக ஒருவர் கூறுவதை நிறைவேற்ற வேண்டியது நம் கடமை” என்று "மக்களுடன் முதல்வர்" திட்டத்தைத் தொடங்கி வைத்த முதலமைச்சர் வலியுறுத்திச் சொன்னார்.

ஆனால் கிராமப்புர, நகர்ப்புர வீடற்ற மக்கள் வீட்டுமனை கேட்டு கொடுத்த லட்சக்கணக்கான மனுக்கள் தீர்வு காணப்படாமல் ஆண்டுக்கணக்கில் ஆட்சியர் அலுவலகங்களில் குவிந்து கிடக்கின்றன. மறுபுறம் ரியல் எஸ்டேட் முதலாளிகளிடம் வீட்டுமனை நிலங்கள் வாங்குவதற்கு ஆளில்லாமல் குவிந்து கிடக்கின்றன. இவையெல்லாம் இந்த அரசுக்குத் தெரியாதா என்ன? மக்களுக்கு குடியிருப்பு உரிமையை உறுதி செய்வதல்ல, ரியல் எஸ்டேட் முதலாளிகளுக்கு லாபத்தை உறுதி செய்வதுதான் இந்த அரசின் கொள்கையாக இருக்கும்போது வீட்டுமனைப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது எப்படி? அரசின் கொள்கையில் மக்கள் நலன் சார்ந்து காத்திரமான மாற்றங்கள் இல்லாமல் கொண்டுவரப்படும், "மக்களுடன் முதல்வர்" போன்ற திட்டங்கள் ஓர் அடையாள நடவடிக்கையாக, அடுத்துவரும் தேர்தலில் ஆளுங்கட்சி வாக்குகளை அறுவடை செய்வதற்கான ஓர் உத்தியாக இருக்குமே தவிர மக்கள் பிரச்சனைகளை முழுமையாகத் தீர்க்க உதவாது.

தமிழ்நாட்டில், செல்வாக்குமிக்க மனிதர்களுக்காக கூலிப்படையினர் நடத்தும் கொலைகள், சாதி ஆணவப் படுகொலைகள், பெண்கள், தலித்துகள், சிறார்கள் மீதான வன்கொடுமைகள், காவல் கொலைகள், போலி மோதல்கள், காவல்துறையின் ஆணாதிக்க, சாதி, மத சார்பு நிலை, தொழிற்சங்க இயக்கங்கள், மக்கள் இயக்கங்கள் மீதான ஒடுக்குமுறைகள் என கடந்த ஆட்சியைப் போல இந்த ஆட்சியிலும் தொடர்வது சட்டத்தின் ஆட்சியில், ஜனநாயகத்தில், மக்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரையும் கவலைகொள்ளச் செய்திருக்கிறது; சீற்றம்கொள்ளச் செய்திருக்கிறது. இதற்கு எதிராக இடது, ஜனநாயக அமைப்புகள் குடிமைச் சமூக, மனித உரிமை அமைப்புகள் குரல் கொடுக்கின்றன. நீதிக்காகப் போராடுகின்றன.

ஆனால் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என, எம்ஜிஆர் ஆட்சியிலிருந்து எடப்பாடி ஆட்சி வரை போலீஸ் ஆட்சிக்குப் பெயர் போன அதிமுக, கலவரம் செய்யாமல் கட்சியை வளர்ப்பது எப்படி என்று அங்கலாய்க்கும் பாஜக, நாடகக் காதல் (லவ் ஜிகாத்தின் தமிழ் வடிவம்) பற்றி பேசி சாதிக் கலவரத்தை தூண்டும் பாமக, மாலியம், சிவனியம் (கர் வாப்சியின் தமிழ் வடிவம்), மொழி, இனவாதம் பேசி, தமிழ்ச் சமூகத்தையே சாதி, மதரீதியில் கூறுபோடும் நாம் தமிழர் உள்ளிட்ட எல்லா பிற்போக்கு கட்சிகளும் போடும் கூப்பாடுகள் கேலிக் கூத்தானவை; ஆபத்தானவை. தங்கள் பங்குக்கு தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தாங்களே உருவாக்குவதும், மறுபக்கம் மற்றெல்லா மக்கள் பிரச்சனைகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு சட்டம் ஒழுங்கு பிரச்சனையை முதன்மையான பிரச்சனையாக முன் நகர்த்துவதும், இவ்வாறாக ஒரு போலீஸ் ஆட்சிக்கான, சர்வாதிகார ஆட்சிக்கான பொதுக் கருத்தை மக்களிடையே உருவாக்கு வதும் தான் இந்த வலதுசாரிகளின் உத்தியாக இருக்கிறது.

நாம் திமுக ஆட்சியில் நடைபெறும் காவல்துறை அத்துமீறல்களை தடுத்துநிறுத்த போராடும் அதே சமயம், திமுக ஆட்சியின் மீதான வலதுசாரி, பிற்போக்கு சக்திகளின் கூப்பாடுகளுக்கு பின்னால் உள்ள உள்நோக்கத்தையும் அம்பலப் படுத்த வேண்டும்.

ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது," காவல்துறை நிர்வாகத்தின் சீரழிவைத் தடுத்து நிறுத்த, உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்படி, தமிழ்நாடு காவல்துறை சீர்திருத்தச் சட்டம் 2013ன் கீழ் 'மாநில பாதுகாப்பு ஆணையம்' அமைக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தியிருந்தார். இந்த ஆட்சியில் மாநில பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டதாக செய்தியும் வெளியானது. ஆனால் இதுவரையில்

அந்த ஆணையம் ஒரு முறை கூட கூடியதாகத் தெரியவில்லை.

மக்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு காண முடியாத எல்லா அரசாங்கங்களும் தங்கள் இருத்தலுக்கு காவல்துறையின் ஒடுக்குமுறையைச் சார்ந்துதான் இருக்கின்றன. திமுக அரசாங்கமும் இதற்கு விதிவிலக்கல்ல. மக்கள் அறுதியிட்டு எழாமல் அரசியல் சட்டமும் செயல்படாது. ஆணையங்களும் செயல்படாது என்பதை நடைமுறை அனுபவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

திமுக தான் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 90%ஐ நிறைவேற்றிவிட்டதாக திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா சொல்கிறார். ரேசன் கடையில் கூடுதலாக ஒரு கிலோ சர்க்கரை வழங்கப்படும், உளுத்தம்பருப்பு மீண்டும் வழங்கப்படும் என்ற எளிய கோரிக்கை களிலிருந்து 3.5 லட்சம் அரசு காலிப் பணியிடங் களை நிரப்புவது, பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும் போன்ற கோரிக்கை கள் வரை நிறைவேற்றப்படாத கோரிக்கைகளின் ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. திமுக அரசுக்கு எதிராக நடைபெறும் தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், செவிலியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் என பலதரப்பட்ட பிரிவினரின் போராட்டங்களில் பெரும்பாலானவை அதன் தேர்தல் வாக்குறுதிகளை மய்யமாகக் கொண்டே எழுகின்றன. ஒரு டிரில்லியன் (ஒரு லட்சம் கோடி) டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற பேரிரைச் சலுக்குள் இந்த எதிர்ப்புக் குரல்களை மூழ்கடிக்கப் பார்க்கிறது திராவிட மாடல் அரசு.

ஒன்றிய அரசும் தன் பங்குக்கு மக்கள் நலத் திட்டங்களை வெட்டிச் சுருக்குவதற்கு மாநிலத்தின் நிதியாதாரங்களைக் கட்டுப்படுத்துவது, மாநிலத் தின் அதிகாரங்களைப் பறிப்பது, ஆளுநரைக் கொண்டு போட்டி அரசாங்கம் நடத்துவது, ஆணாதிக்க, சாதி, மத, தேச வெறிச் சக்திகளுக்கு ஊக்கமளிப்பது என வாய்ப்புள்ள எல்லா வழிகளிலும் திமுக அரசு மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் தாக்குதல் தொடுக்கிறது.

திராவிட எதிர்ப்பு வலதுசாரி தளத்திலிருந்து பாஜக, பாமக, நாம் தமிழர் போன்ற கட்சிகள் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி வெளியைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன. பிரதான எதிர்க்கட்சியான அதிமுக கூட, திமுக எதிர்ப்பு என்ற பெயரில் திராவிட எதிர்ப்புக் கருத்துகளை முன்வைக்கிறது. புரட்சிகர கம்யூனிஸ்டுகளாகிய நாம், திராவிட இயக்கத்தின் முற்போக்கு விழுமியங்களை விமர்சனப்பூர்வமாக உட்கிரகித்துக்கொண்டு, தமிழ்ச் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல, இடது ஜனநாயக அமைப்புகளோடு ஒன்றிணைந்து, இடதுசாரித் தளத்திலிருந்து எதிர்க்கட்சி வெளியைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டும்.

வலதுசாரி அரசாங்கமோ, திமுக போன்ற நடுச்சாரி அரசாங்கமோ, அல்லது இடது முன்னணி அரசாங்கமோ, எதுவாக இருந்தாலும் சரி புரட்சிகர எதிர்க்கட்சி என்பதுதான் நமது அடிப்படை நிலைப்பாடாகும். அதே சமயம், வேறுபட்ட சூழல்கள், வேறுபட்ட அரசாங்கங்கள், வேறுபட்ட பிரச்சனைகளில் நடைமுறைக் களத்தில் செயல் தந்திர நெகிழ்வுத்தன்மையுடன் நாம் செயலாற்ற வேண்டியிருக்கிறது. அந்த வகையில் ஒன்றிய பாசிச பாஜக அரசு திமுக அரசை சீர்குலைக்க முயற்சிக்கும் போதும், திமுக அரசு ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத, மக்கள் விரோத கொள்கைகளை எதிர்க்கும்போதும் நாம் திமுக அரசுக்கு விமர்சனபூர்வமாக ஆதரவளிப்பதும், திமுக அரசின் கார்ப்பரேட் ஆதரவு மக்கள் விரோத நடவடிக்கைகளை மக்களை அணிதிரட்டி முறியடிப்பதும் புரட்சிகர எதிர்க்கட்சி பாத்திரத்தின் ஒருங்கிணைந்த அம்சங்கள்தான்.

அதிமுக பலவீனமடைந்தால், பாஜக எதிர்க்கட்சி வெளியைக் கைப்பற்றி விடும். எனவே அதிமுக பலமாக இருக்க வேண்டும் என்ற மூடக்கருத்து முற்போக்கு வட்டாரங்களில் இருக்கிறது. இடது, ஜனநாயக சக்திகள் ஒரு மாற்று சக்தியாக எழுவதோ, அரசியல் மய்ய நீரோட்டத்திற்கு வருவதோ சாத்தியமில்லை; அவர்கள் விளிம்புநிலை சக்தியாக இருப்பதற்கே விதிக்கப்பட்டவர்கள் என்பதுதான் இதன் பின்னுள்ள கருத்து. நாம் இந்தக் கருத்தை திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டும்.

நிலம், சாதி ஒழிப்பு, சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழிக்கும் சமூக நீதி, மதச் சார்பின்மை, தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டத்தினூடே

கிராமப்புர, நகர்ப்புரத் தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகள், ஜனநாயகப் பிரிவினரை ஓர் அரசியல் சக்தியாக அறுதியிட்டு எழச் செய்ய வேண்டும். இதன் வழியாக எதிர்க்கட்சி வெளியை இடது, ஜனநாயக, முற்போக்கு சக்திகள் கைப்பற்ற வேண்டும். ❑

# இகக(மாலெ) 11வது காங்கிரஸ் ஆவணங்கள்
# சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடி (பகுதி 2)
## (2023 பிப்ரவரி 16-20ல் பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)

சென்ற இதழ் தொடர்ச்சி...

6. தற்போது, உலக அளவில் 3.33.6 பில்லியன் (330360 கோடி) மக்கள் அதிதீவிர காலநிலை பாதிப்பிற்கு ஆட்படும் நிலையில் வாழ்கின்றனர். அகதிகளுக்கான அய்க்கிய நாடுகளின் உயர்மட்ட ஆணையரது அறிக்கைபடி, 2008 லிருந்து ஒரு ஆண்டுக்கு சராசரியாக 21.5 மில்லியன் (2 கோடி 15 லட்சம்) மக்கள் வெள்ளம், புயல், காட்டுத்தீ, அதிதீவிர வெப்பநிலை போன்ற வானிலை தொடர்பான நிகழ்வுகளால் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்து வருகிறார்கள். வரும் பத்தாண்டுகளில் இந்த எண்ணிக்கை, மேலும் எழுச்சியுறும், காலநிலை மாற்றத்தாலும், இயற்கைப் பேரிடர்களாலும் உலக அளவில் இடம் பெயர்பவர்களின் எண்ணிக்கை சில நூறு கோடிகளை எட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக காலநிலை ஆபத்துக் குறியீடு 2021 இன் படி, காலநிலை மாற்றத்தால் மிக அதிக பாதிப்படையும் முதல் 10 நாடுகளில் இந்தியாவும் சேர்க்கப் பட்டுள்ளது. டிசம்பர் 2020 இல், 'காலநிலை மாற்றத்தில் செயலற்று இருப்பதற்கான விலை: இடம்பெயர்தலும் துயர்மிகு புலம்பெயர்தலும்' என்று தலைப்பிடப்பட்ட அறிக்கை, 2050 வாக்கில் காலநிலை பேரிடர்களால் 4.5 கோடி இந்தியர்கள் தங்களது வீடுகளை விட்டு புலம்பெயரும் நெருக்கடிக்கு ஆளாவார்கள் என்றும், தற்போது இந்தியாவில் 1.4 கோடி மக்கள் சுற்றுச்சூழல் இடையூறுகளால் இடம்பெயர்கிறார்கள் என்றும் மதிப்பிட்டுள்ளது. சமத்துவமின்மை, மோதல், மருத்துவம் போன்ற அடிப்படை சேவைகளைப் பெற இயலாத நிலை ஆகியவை தீங்குகளுக்கு ஆட்படுவதை அதிகரிக்க மட்டும் செய்வதில்லை; காலநிலை மாற்றத்திற்கு சமூகங்கள் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் திறனையும் சுருக்குகிறது.

7. துயரம் என்னவெனில், முதலாளித்துவத்தால் தூண்டப்படுகிற இந்த காலநிலை மாற்றத்தை வெளிப்படையாக மறுக்கிற வலதுசாரி, அடிப்படைவாத சக்திகளை நாளும் பொழுதும் காண்கிறோம். இப்படி மறுத்தும், இதுகுறித்து சமூக ஊடகங்களில் சதி தத்துவங்களை பரப்பியும் வருகிற டொனால்ட் ட்ரம்ப், போல்சனொரா, நரேந்திர மோடி, வாக்லேவ் க்லாஸ் இது போன்ற இன்னும் பல தேசத் தலைவர்களால் இத்துயரம் ஊதிப் பெரிதாக்கப் படுகிறது. போலி அறிவியல், புனைவுகள், கெடுநோக்குடன் திரிக்கப்பட்ட தகவல்கள் ஆகியவை அறிவியலுக்கெதிரான மனோநிலையை பரப்பப் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், பிரேசிலின் முன்னாள் அதிபர் போல்சனொரா போன்ற இன்னும் பல தலைவர்களும் மக்களால் தோற்கடிக்கப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளூர் மக்களின் வன, வாழ்வாதார உரிமைகளுக்கு வெளிப்படையாக ஆதரவளித்து, கார்ப்பரேட் இலாபவெறிக்காக அமேசான் காடுகளை அழிக்கும் வெட்கக்கேடான முயற்சியை கண்டித்த, தொழிலாளர் கட்சி தலைவர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா அவர்களை தேர்ந்தெடுத்து, வன அழிப்பு, பெருநிறுவன ஆதரவு தலைவர் போல்சனொராவை நிராகரித்த பிரேசில் மக்களின் செயல் போற்றத்தக்கது. இந்தியாவில் ஒன்றியத் திலும், மாநிலங்களிலும் அதிகாரத்திலுள்ள பாஜக அரசாங்கம் காலநிலை மாற்றத்தை கையாளு வதற்கான கொள்கைகளில் அறிவியலற்ற அணுகு முறையைக் கடைப்பிடிப்பதோடு, சுற்றுச் சூழலுக்கும் காலநிலைக்கும் மேலும் மேலும் சீரழிவு ஏற்பட வழிவகுப்பதையும் அப்பட்டமாக பின்பற்றி வருகிறது.

8. காலநிலை மாற்றத்தை மறுப்பவர்களுக்கு எதிராகப் போராடுவதற்கு கூட்டணிகளையும் அணிகளையும் கட்டமைத்து காலநிலை மாற்றத்தை தடுத்து நிறுத்தும், ஏழைகள் சார்பு கொள்கைகளை இயற்றுவதை உறுதிசெய்ய வேண்டிய தேவை நமக்கு உள்ளது. காலநிலை சீரழிவு, பூமியின் வளங்களை சுரண்டுவதில் உள்ள வர்க்க கோணத்தை புரிந்துகொள்ள வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தொழில்வளமிக்க, வளர்ந்த நாடுகள் உலகின் மற்ற நாடுகளை விட அதிகரித்த அளவில் இந்த நெருக்கடிக்கு காரணமாக உள்ளன என்பது சந்தேகத்திற்கு அப்பாற் பட்டதாகும். இந்த வளர்ந்த நாடுகளிலும் கூட, அந்த நாடுகளின் வசதி படைத்தவர்களை விட ஏழை எளிய

மக்கள்தான் அதிகளவு காலநிலை நெருக்கடியை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர் என அங்கீகரிப்பதும்கூட முக்கியமானது. காலநிலை மாற்றத்தால் உண்மையாக பாதிக்கப் பட்டவர்களோடுகாலநிலை நெருக்கடியின் கடுமைகளை, மற்றவர்களைவிட கூடுதலாக எதிர் கொண்டு தாங்கிக்கொள்ளும் ஏழைகள், பல நிறத்தவர்கள், விளிம்பு நிலையிலுள்ளவர்கள், பூர்வகுடி மக்கள் ஆகியவர்களோடு எல்லைகள் தாண்டிய சுற்றுப்புறச்சூழல் ஒருமைப்பாட்டைக் கட்டமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

9. காலநிலை நெருக்கடி, சமத்துவமின்மையால் வேகம்பிடிக்கிறது. கார்பன் வெளியேற்றத்தி?ல் நாடுகளுக்கு இடையே உள்ள பெரும் வேறுபாட்டை மறந்துவிடக்கூடாது; 'உயிர் பிழைத்திருப்பதற்கான' உமிழ்தலுக்கும்'ஆடம்பரத்துக்கான' உமிழ்தலுக்கும் இடையிலான வேறுபாட்டையும் பிரித்தறிய வேண்டும். இந்தியாவின் ஒரு தனி நபருக்கான பசுமை வாயு உமிழ்வு (நில பயன்பாடு, நிலப் பயன்பாடு மாற்றம், வனவியல் எல்யுஎல்யுஎ∴ப் உள்ளிட்ட) 2.4 டிசிஓ2ஈ (டன் அளவீடுகளில் கரியமிலவாயுவின் நிறை) என்பது உலக சராசரியான 6.3 டிசிஓ2ஈ விட மிகக் குறைவானதாகும். இது, அய்க்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு (சிஓபி27) எகிப்தில் நடப்பதற்கு சற்று முன்பு வெளியிடப்பட்ட "எமிசன்ஸ் கேப் ரிப்போர்ட் 2022: த குளோசிங் விண்டோ" வில் (மூடிக்கொள்ளும் திறப்பு) வெளிப்படுத்தப்பட்டது. இந்த அளவுகளில் 14 டிசிஓ2ஈ என, அமெரிக்கா தொடர்ந்து மிக அதிகமாக வெளியிட்டு கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து ரஷ்ய கூட்டமைப்பு 13 டிசிஓ2ஈ அளவையும், 9.7 டிசிஓ2ஈ அளவை சீனாவும், 7.5 டிசிஓ2ஈ அளவை பிரேசிலும் இந்தோனேசியாவும், 7.2 டிசிஓ2ஈ அளவை அய்ரோப்பிய ஒன்றியமும் கொண்டுள்ளன. ஜி20 உறுப்பினர்களிடையே தனி நபர் உமிழ்வு அளவுகளில் வேறுபாடு: இந்தியாவின் உமிழ்வு, ஜி20 சராசரியில் கிட்டத்தட்ட பாதியளவு தான்; அதேநேரத்தில், சவுதி அரேபியா ஜி20 சராசரியில் இரு மடங்குக்கும் அதிகமான அளவைத் தொட்டுவிட்டது என அந்த அறிக்கை கூறுகிறது. வரலாற்று ரீதியாக ஒட்டுமொத்த கரியமிலவாயு உமிழ்வில் (எல்யுஎல்யுஎ∴ப் தவிர்த்து) இந்தியாவின் பங்கு 3% ஆகும். அதேநேரத்தில், 1850 திலிருந்து 2019 வரை மொத்த புதைபடிவ கரியமிலவாயு உமிழ்வில் அமெரிக்கா, அய்ரோப்பிய ஒன்றியத்தின் பங்கு முறையே 25% மும் 17% மும் ஆகும். சீனாவின் பங்கு 13%, ரஷ்ய கூட்டமைப்பு 7%, இந்தோனேசியா, பிரேசில் ஒவ்வொன்றும் 1%. 1850 திலிருந்து 2019 வரை புதைபடிவ எரிபொருள், தொழிற்சாலை உமிழ்வில் மிகக் குறைவான வளர்ச்சி பெற்ற நாடுகளின் பங்கு வெறும் 0.5% மட்டுமே.

10. கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதில் முதன்மை பொறுப்பு முதல் உலகிற்கு இருக்கிறது என்று அவர்களைப் பொறுப்பாக்கும் அதேசமயம், சுற்றுச்சூழலுக்கு பொறுப்புடைய உள்நாட்டு கொள்கைகளை வடிவமைக்குமாறு இந்திய அரசாங்கத்தை பொறுப்பாக்கிடவும் வேண்டும். ஒருபுறம், 2021 கிளாஸ்கோ மாநாட்டில், 2030 வாக்கில் நாட்டின் 50% ஆற்றல் தேவைகளை புதுப்பிக்கத்தக்க வளங்களில் இருந்து பெறுவோம் எனவும், 2070 வாக்கில் நிகர சுழிய வெளியேற்ற இலக்கை எட்டுவோம் எனவும் இந்தியா உறுதி கொடுத்தது. ஆனால், அதற்கு எதிரான அசைவுகள் செயல்பாட்டில் வெளிப்படுவதைக் காணலாம். உதாரணமாக, டிசம்பர் 2019 இல், கிழக்கத்திய மாநிலமான ஒடிசாவின் தலபிராவில் அமைக்கப்படும் திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கத் திட்டங்களுக்கு வன நிலங்களை மாற்றிக் கொடுக்க மோடி அரசாங்கம் அனுமதி வழங்கிய பிறகு, தோராயமாக 40,000 மரங்கள் வெட்டப்பட்டதுடன், நூற்றுக் கணக்கான உள்ளூர் மக்கள் இடம்பெயரக் காரண மானது. மேற்கு வங்கத்தின் தியோச்சா பச்சமியில் புதிய திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. ஆசியாவிலேயே மிகப்பெரி யதும் உலகிலேயே இரண்டாவது மிகப்பெரியது மான இந்த நிலக்கரிச் சுரங்கம், சுற்றுச்சூழல் அழிவை ஏற்படுத்தி, ஆயிரக்கணக்கான பழங் குடியின மக்களை அவர்களது நிலத்திலிருந்தும் வாழ்வாதாரத்திலிருந்தும் கலாச்சாரத்திலிருந்தும் வெளியேற்றிவிடும். கட்டுப்பாடுகளை எளிதாக்கிய பிறகு, எல்லா உள்ளூர், உலக நிறுவனங்களுக்கு சுரங்கம் தோண்டுவதற்கு நிலக்கரித் துறையை திறந்துவிடும், நிலக்கரிச் சுரங்கங்கள் (சிறப்பு விதிமுறைகள்) சட்டம் 2015 அய் திருத்த ஒரு அவசரச்சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இந்த புதிய விதிமுறைகளின் அடிப்படையில் 41 நிலக்கரித் தொகுதி களுக்கான ஏலத்தை சமீபத்தில் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இதில் பலவும் மத்திய இந்தியாவின் அடர்ந்த வனங்களில் அமைந்துள்ளன.

# ஒன்றிய நிதிநிலை அறிக்கை 2024–25







நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் 2024–25 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய நிதிநிலை அறிக்கை மக்களவையில் ஜூலை 23, 2024 செவ்வாய் அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இது மோடி 3.0 அரசாங்கத்தின் முதல் நிதிநிலை அறிக்கையும், சீதாராமனது ஏழாவது தொடர்ச்சியான நிதிநிலை அறிக்கையுமாகும். இந்தியா சுதந்திரம் பெற்ற நூறாவது ஆண்டான 2047 இல் 'விக்சிட் பாரத்' அல்லது வளர்ச்சியடைந்த இந்தியா என்ற நோக்கத்தை கருத்தில் கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டுள்ளதாக அறிமுக பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. விவசாயிகள், ஏழைகள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோர் இந்த விக்சிட் பாரத்தின் முக்கியத் தூண்களாக இருப்பார்கள்; அவர்களது வளர்ச்சி, முன்னேற்றத்துக்கு அதிக கவனம் குவிக்கப்படும் எனவும் சொல்லப்படுகிறது.

## அதிகரித்து வரும் விவசாயிகள் நெருக்கடி

கடந்த சில ஆண்டுகளாகவே இந்தியா விவசாயிகளின் தொடர் போராட்டங்களை சந்தித்து வருகிறது. அவர்களது முக்கியமான கோரிக்கையான குறைந்தபட்ச ஆதாரவிலை உறுதி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த நிதிநிலை அறிக்கையிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. விவசாயம், அது தொடர்பான துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு நிதியாண்டு 2024 இல் ரூ.1.41 லட்சம் கோடி என்பதிலிருந்து நிதியாண்டு 2025ல் ரூ.1.52 லட்சம் கோடியாக மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. அது வெறும் 8% உயர்வு மட்டுமே. பாதுகாப்புத் துறைக்கு வழங்கப்பட்டுள்ள ரூ.6.22 லட்சம் கோடியோடு ஒப்பிடும் போது இந்த நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவானதாகும். உரம், உணவுக்கான மானியங்கள் தற்போதைய ரூ.2.15 லட்சம் கோடியில் இருந்து ரூ.1.64 லட்சம் கோடியாக குறைக்கப் பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு கோடி விவசாயிகள் இயற்கை வேளாண்மையை நோக்கி ஈர்க்கப்படுவதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பது அவர்கள் கார்ப்பரேட்டுகளுக்குள் உள்வாங்கப்படுவார்கள், கார்ப்பரேட்டுகளின் பிடிக்குள் சிக்கவைக்கப்படுவார்கள் என்றே அர்த்தமாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் விவசாயம், அது தொடர்புடைய துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி விகிதம் கிட்டத்தட்ட 4.2% ஆக இருக்கிறது. இது கடந்த நாற்பது ஆண்டுகளில் எந்த ஒரு காலகட்டத்திலும் மிக மிக குறைவான வளர்ச்சி விகிதம் ஆகும். ஏழை விவசாயிகளுக்கான வருமான ஆதரவு திட்டமான பிஎம் கிசான் சம்மன் நிதி திட்டத்திற்கு நிதி எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் அதேயளவு ஒதுக்கப்பட்டுள்ளது. 2018லிருந்து ஓராண்டுக்கு ரூ.6000 என்று நிர்ணயிக்கப்பட்டது மாற்றப்படாமல் அப்படியே தொடர்கிறது. கிட்டத்தட்ட 45% மக்கள் விவசாய வேலைகளை நேரடியாக நம்பி இருக்கிறார்கள். அதுபோக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 18.2%

ஐ நாட்டின் விவசாயிகள் வழங்குகிறார்கள். இருந்தபோதிலும் மத்திய அரசு கிராமப்புற பொருளாதாரத்தை சீரழிக்கப்பார்க்கிறது. வேளாண் துறையை கார்ப்பரேட் கைகளுக்கு வாரி வழங்க துடிக்கிறது. இதன்மூலம் விவசாயத் துறையை நெருக்கடிக்குள்ளாக்குகிறது. இப்படி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் விவசாயத் துறைக்கு நிவாரணம் அளிப்பதற்குப் பதிலாக, காலநிலையைத் தாங்கும் உயர் விளைச்சல் தரும் மரபணு வகை மாற்றுப்பயிர்களை பெரு முதலாளிகள் ஆக்கிரமிப்பதற்கு நிதியமைச்சர் அழைப்பு விடுத் துள்ளார். இந்திய விவசாயத்தில் மரபணு மாற்றுப் பயிர்களை கொண்டுவருவதற்கு எதிராக நாட்டின் விவசாயிகள் மீண்டும் மீண்டும் எதிர்ப்பு தெரிவித்து வருகிற போதும் இவ்வாறு நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

## ஏழைகளைக் கசக்கிப் பிழியும் ஜிஎஸ்டி

ஜிஎஸ்டி, பிற மறைமுக வரிகளின் சுமைகளால் ஏழைகள் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப் படுகின்றனர். ஏழைகள் வரிகளை செலுத்துவதில்லை என வாட்ஸ்அப் பரப்புரைகள் கூறலாம். வெறும் இரண்டு கோடி மக்கள் மட்டுமே நேரடி வருமான வரி செலுத்துகின்றனர். இது நாட்டின் மக்கள் தொகையில் 2.2% தான். ஆனால் யதார்த்தத்தில் ஒவ்வொன்றிலும் இருந்து பெரும் வரி வசூலிக்கப்படுகிறது. மக்கள் வாங்கும் மாவு, பருப்பு, அரிசி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் 5% ஜிஎஸ்டி வரி முதல், சாலை வரி, டோல் வரி, பெட்ரோல், டீசல் மீதான வரி என ஒவ்வொருவரின் சட்டைப் பையிலிருந்தும் பிடுங்கிக் கொள்ளப்படுகிறது. பெரும் செல்வச் சீமான் களுக்கான கார்ப்பரேட் வரி குறைக்கப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் படி ஜிஎஸ்டி, பிற வரிகளில் இருந்து 18% மும், வருமான வரியில் இருந்து 19% மும் பெறப்பட்டுள்ள நிலையில் கார்ப்பரேட் வரியிலிருந்து 17% மட்டுமே வசூலிக்கப்பட்டு வரவாகியுள்ளது. ஜிஎஸ்டி ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறது. ஜூன் மாதத்தில் மட்டும் ரூ1.74 லட்சம் கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. உலகப் பட்டினிக் குறியீட்டில் இந்தியா 111 வது இடத்திலுள்ளது. மேலும் எம்ஜிஎன்ஆர்இஜிஎஸ் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அதேபோன்றதொரு திட்டம் நகர்புறங்களிலும் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் எழுப்பப்படும் கோரிக்கை காது கேளாதவர் காதில் ஊதிய சங்காக போய்விட்டது. இந்த திட்டத்திற்கு கடந்த இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட அதே ரூ86,000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தத் திட்டத் திற்கான தேவை 2.5 லட்சம் கோடி என இந்தத் திட்டம் குறித்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நிதி ஒதுக்கீடு தவிர டிஜிட்டல் முறையில் வருகைப்பதிவு, சம்பள பட்டுவாடா போன்றவைகளும் இந்த திட்டத்தில் இருந்து ஏழைகளை விலக்கி வைப்பதில் பெரும் பங்காற்றுகின்றன.

## திறன் மேம்பாடு என்ற முதலாளிகள் ஆதரவு திட்டம்

பொருளாதார ஆய்வறிக்கையின்படி, அதிகரித்துக் கொண்டிருக்கும் தொழிலாளர் சக்தியை உள்வாங்கிக் கொள்வதற்காக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டுக்கும் 80 லட்சம் புதிய வேலைகள் தேவைப்படுகின்றன. 2014 இல் பாஜக அரசாங்கம் ஆட்சிக்கு வந்து போது ஒரு ஆண்டிற்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றது. அப்படி செய்யப் பட்டிருந்தால் இந்த 2024 வரை 20 கோடி புதிய வேலைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இருக்கும் வேலைகள் காற்றில் பறந்து கொண்டிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ரயில்வே உள்ளிட்ட பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், மத்திய அரசு நிறுவனங்களில் உள்ள வேலைகள் காலியாக விடப்பட்டுள்ளன. அல்லது தற்காலிக, ஒப்பந்த பணிகளாக்கப்பட்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பெருந்தொற்று போல பரவிக் கொண்டிருக்கிறது. இதன் விகிதம் 9.2% ஆக உள்ளது. மேலும் அது இளைஞர்கள் மத்தியில் மிகவும் அதிகமாகவும் உள்ளது. எங்காவது வேலைக்கு ஆள் எடுக்கிறார்கள் என்றால் ஒரு இடத்துக்கு நூற்றுக்கணக்கானவர்கள் போட்டியிடும் நிலையை நாம் செய்திகளில் பார்க்கிறோம். நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர் களுக்கான வேலைவாய்ப்பு ஒரு முக்கிய தேவையாகும். இந்த பற்றி எரியும் பிரச்சனை பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில், அரசாங்கம் சற்றும் பொருட்படுத்தவில்லை. இளைஞர்களுக்கு நிரந்தர மான, கௌரவமான வேலை வழங்குவதற்கு மாறாக வேலை பெறுவதற்கு தேவையான திறன் மேம்பாடு, பயிற்சி வழங்குவது என்ற திட்டத்தை முன் வைத்துள்ளது. இதன்படி அடுத்த ஐந்து ஆண்டுகளில் 20 லட்சம் இளைஞர்கள் திறன் மேம்பாடு திட்டத்தில் பயனடைவார்கள் என

அரசாங்கம் கூறுகிறது. ஆயிரம் தொழில் பயிற்சி நிலையங்களை மேம்படுத்துவதற்கான திட்டமும் முன் வைத்திருக்கிறது. 500 முக்கிய தனியார் நிறுவனங்களில் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு ஒரு கோடி இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். ஒரு மாதத்திற்கு ரூ5000 வீதமாக ஓர் ஆண்டுக்கு இந்த அரசாங்கம் உதவித்தொகை வழங்கும். மேலும் வேலையில் சேரும்போது உதவியாக ரூ6000 ஒருமுறை வழங்கும். இது முதலாளிகளுக்கு அற்ப கூலியில் தொழிலாளர்கள் கிடைப்பதற்கு வழிவகை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. நிறுவனங்கள் இந்த பயிற்சித் திட்டத்தை பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்காமல் வேலை வாங்கிக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

## தொடர்ந்து புறக்கணிக்கப்படும் பெண்கள்

இந்த நிதிநிலை அறிக்கையிலும் பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கான எந்த ஒரு குறிப்பான திட்டங்களோ அல்லது நிதி ஆதரவோ வழங்கப்படவில்லை. பெண்களின் முக்கியமான தேவைகளையும் கண்டுகொள்ளத் தவறிவிட்டது. பொருளாதாரம், சமூகம், உடல்நலம் ஆகியவற்றில் பெண்களின் முன்னேற்றம் குறித்த எதிர்பார்ப்புகளையும் இந்த நிதிநிலை அறிக்கை புறக்கணித்துவிட்டது. பெண்களுக்கு பயன ளிக்கும் வகையிலான திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் ரூ 3 லட்சம் கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளதாக சீதாராமன் செவ்வாய் அன்று அறிவித்தார். பெண்கள் பொதுவாக தொழிலாளர் சக்தியில் இருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படுவதில்லை. பணியிடங்களில் பாது காப்பு, கண்ணியமான பணி நிலைமைகள், பாலியல் துன்புறுத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள், குழந்தை பராமரிப்பு போன்றவற்றுக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் சந்தையின் தேவைக்கேற்ப பெண்களின் தனித்திறமைகளை மேம்படுத்து வதற்கான நமோ ட்ரோன் தீதி என்ற திட்டத்திற்கு ரூ 500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கான ட்ரோன்கள் தேர்ந் தெடுக்கப்பட்ட 15,000 பெண்கள் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் எனக் கூறப் பட்டுள்ளது. மத்திய அரசின் தீன் தயாள் அந்தி யோதயா யோஜனாவின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 89 லட்சம் சுய உதவிக் குழுக்களில் 15,000 குழுக்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டு இந்த நிதி வழங்கப்படும். ரூ.10 லட்சம் மதிப்புள்ள ஒரு ட்ரோனை வாங்குவதற்கு ஒரு சுய உதவி குழுவுக்கு அதிகபட்சமாக ரூ.8 லட்சம் மானியமாக வழங்கப்படும். மீதி உள்ள நிதியை வங்கி களிடமிருந்து கடனாக பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படியான திட்டங்களின் கோலாகலமான அறிவிப்புக்கும் நடைமுறை சாத்தியப்பாடுகளுக்கும் உள்ள இடைவெளி நாம் அனைவரும் அறிந்ததே! கிராமப்புறங்களில் உள்ள பரந்த பெண்கள் இது போன்ற திட்டங்களில் இருந்து எப்போதும் விலக்கி வைக்கப்படுவார்கள். நகர்ப்புறங்களில் உள்ள பெண்களுக்கு உற்பத்தி, அடிப்படை கட்டமைப்பு தொழில்துறைகளில் வேலை வாய்ப்புகள் குறித்த எவ்வித குறிப்பான திட்டங்களும் கூட இல்லை.

## எதிர் கட்சிகள் ஆளும் மாநிலங்கள் புறக்கணிப்பு

இது 'குர்ஷி பச்சோ' அல்லது நாற்காலியை பாதுகாப்பதற்கான நிதிநிலை அறிக்கை என எதிர் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. உண்மைதான். இந்த பாஜக ஆட்சிக்கு ஆந்திர பிரதேசத்தின் தெலுங்கு தேசம் கட்சியும், பீகாரின் ஐக்கிய ஜனதா தளம் கட்சியும் முக்கிய ஆதரவு வழங்குகின்றன. அவர்களை கோபப்படுத்தாமல் இருக்க பாஜக நிதிநிலை அறிக்கையில் சலுகைகளை வாரி வழங்கி உள்ளது. ஆந்திர பிரதேசத்திற்கு பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் ரூ.65 ஆயிரம் கோடி மதிப்பிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பீகாருக்கு ரூ.58,900 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் ஆளும் தமிழ்நாடு, மேற்கு வங்கம் போன்ற முக்கிய மாநிலங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் முற்றிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளன. தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டிய ஜிஎஸ்டியின் பங்கு வழங்கப்படவில்லை என குற்றம் சாட்டப்படுகிறது. பல்வேறு ரயில்வே திட்டங்களுக்கான நிதியும் ஒதுக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டம், நாடாளுமன்ற ஜனநாயகம், கூட்டாட்சி ஆகியவற்றை குழி தோண்டி புதைக்க நினைக்கும் பாஜக, சங்கிப்படைகளுக்கு எதிர்க்கட்சிகளை ஒழித்துக் கட்டுவதற்கான ஒரு ஆயுதமாக இந்த ஒன்றிய நிதிநிலை அறிக்கை பயன்பட்டுள்ளது. ❑

# கொடூர குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக டெல்லியில் வழக்கறிஞர்கள் போராட்டம்

## இகக(மாலெ) நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

பாசிச மோடி–அமித்ஷா அரசு, மிகக் கொடூர மான, நாசகாரக் குற்றவியல் சட்டங்களை கடந்த ஜூலை *1* முதல் நாட்டில் அமலபடுத்தியுள்ளது. இதற்கு எதிரான விழிப்புணர்வை வழக்கறிஞர்கள் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லும் வகையிலும் இச் சட்டங்களைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் தொடர் போராட்டங்களை தமிழ்நாடு – புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு நடத்தி வந்தது. தமிழ்நாட்டு வழக்கறிஞர்கள் சார்பாக டெல்லி ஐந்தர்மந்தரில் கடந்த *29.7.2024* அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வழக்கறிஞர்கள் நடத்திய போராட்டத்தில் சிபிஐ (எம்எல்) பீகார் மாநில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோழர் ராஜாராம்சிங், தோழர் சுதாமா பிரசாத் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கத்தின் (AILAJ) அகில இந்திய துணைத் தலைவர் ஜி.ரமேஷ், அகில இந்திய செயலாளர் சூர்ய பிரகாஷ், தமிழ்நாடு மாநிலக் குழு உறுப்பினர்கள் வழ.முருகேசன், வழ. கென்னடி, வழ. கம்ருதீன், டெல்லி வழக்கறிஞர்கள் வெர்டிகா, அவினாஷ்குமார் AILAJ சார்பாக கலந்து கொண்டனர். இகக பொதுச்செயலாளர் து.ராசா, விசிக தலைவர் தோழர் திருமாவளவன், திமுகவின் ஆ.ராசா மதிமுக துரை வைகோ, காங்கிரஸ் கட்சியின் விஜய்வசந்த், ராபர்ட் புரூஸ் உள்ளிட்ட தமிழ்நாட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று வழக்கறிஞர்கள் மத்தியில் உரையாற்றினர்.

### தோழர் ராஜாராம் சிங்

மேடையில் அமர்ந்திருக்கும் தலைமைக் குழுவிற்கும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இங்கு வந்திருக்கிற அனைத்து வழக்கறிஞர் களுக்கும் சிபிஐ (எம்எல்) கட்சி சார்பாகவும் நாட்டின் உயர்ந்த அவையான நாடாளுமன்றத்தின் சார்பாகவும் முதற்கண் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலேயர் காலத்துச் சட்டங்கள் இது. அதைத்தான் நாங்கள் மாற்றினோம் என்று சொல்லப் பட்டது. ஆனால், உண்மை என்னவென்றால் பாஜக,நாட்டின் கூட்டாட்சியைப் பலவீனப்படுத்திக் கொண்டிருகிறது. அரசமைப்புச் சட்டத்தைப் பலவீனப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதே வழியில், அதிக எதேச்சதிகாரம் கொண்ட, அதிக அதிகாரத்துவம் கொண்ட, அதிக சர்வாதிகாரம் கொண்ட சட்டங்களை உருவாக்கியிருக்கிறது.

நாட்டின் சட்டத்தைப் பாதுகாப்பதற்காக, அண்ணல் அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தைப் பாதுகாப்பதற்காக, ஜனநாயகத்தைக் காப்பதற்காக, மனித உரிமைகளைக் காப்பதற்காகப் போராடு கின்ற, முக்கியமாக இந்தப் பரப்புரையை மேற்கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களைச் சந்திப்பதற்காக நாடாளுமன்றக் கூட்டத்தில் இருந்து நாங்கள் நேராக வருகிறோம். உங்கள் போராட்டத்தை நாங்கள் வாழ்த்துகிறோம். யாரும் இந்த நாட்டின் ஜனநாயகத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது. இந்தியாவின் ஒற்றுமைக்காக, எளிய மக்களின் நலன்காக்க, மதச்சார்பின்மைக்காக உருவாக்கப்பட்ட அரசமைப் புச் சட்டத்தை யாரும் அழிக்க முடியாது. நீங்கள் போராட்டக் களத்தில் நிற்கிறீர்கள். எங்களின் ஒருமைப்பாட்டைத் தெரிவிப்பதற்காக நாங்கள் வந்துள்ளோம். நாங்கள் உங்களோடு நிற்கிறோம்.



உங்களோடு சேர்ந்து குரலெழுப்புவோம். நன்றி.

## தோழர் சுதாமா பிரசாத்

மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்




பினர்களே, இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டின் வழக்கறிஞர்களே, தைரியமான முடிவோடு, நீண்ட தூரத்தில் இருந்து டெல்லிக்கு போராடுவதற்காக வந்துள்ள உங்கள் அனைவருக்கும் எனது புரட்சிகர வாழ்த்துகள். விவசாயிகள் நலன்காக்க என்ற பெயரில், விவசாய வளர்ச்சி என்ற பெயரில் விவசாயச் சட்டங்கள் அப்போது கொண்டு வரப்பட்டது போலவே, அதே வழியில், விரைவான நீதி, குற்றங்களைக் கட்டுப்படுத்தல் என்ற பெயரில் இந்த மூன்று குற்றவியல் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. விவசாயச் சட்டங்கள் தங்களுடைய விவசாயத்தை முன்னேற்றவோ, தங்கள் வருமானத்தை அதிகரிக்கவோ கொண்டு வரப்படவில்லை, மாறாக விவசாய நிலங்களை கார்ப்பரேட்களின் கைகளில் கொடுப்பதற்காகத்தான் என்பதை பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். அதன் காரணமாக, டெல்லி எல்லையில் பல்வேறு இடங்களில் அமர்ந்து ஓர் ஆண்டு 13 நாள்கள் போராட்டம் நடத்தினார்கள். 750க்கும் மேற்பட்ட விவசாயிகள் தியாகியானார்கள். அதன் பின் ஒன்றிய அரசு அந்தச் சட்டங்களை நிறுத்தி வைத்தது. அதே வழியில், இந்த மூன்று குற்றவியல் சட்டங்களும் விரைவான நீதிக்கோ, குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்ல, இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள வெளிப்படுத்தும் சுதந்திரத்தை, உரிமையை ஒழிப்பதற்குத்தான் என்பதை தமிழ்நாட்டின் வழக்கறிஞர்கள் சரியாகப் புரிந்து கொண்டார்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன். இந்தச் சட்டங்கள் நிரந்தரமாக நெருக்கடி நிலையை அமல்படுத்திடவும் நாடு முழுவதும் போலீஸ் ஆட்சியை அமல்படுத்திடவுமே கொண்டுவரப் பட்டுள்ளன. இந்தச் சட்டங்கள் ஜூலை 1 முதல் அமலுக்கு வந்துள்ளன. ஜூலை 1 அன்று நாடாளு மன்றத்தில் நாங்கள் இந்தச் சட்டங்கள் மறுபரி சீலனை செய்யப்பட வேண்டும். மீண்டும் நாடாளு மன்றத்தின் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப் பட வேண்டும் என்று முன்வைத்துள்ளோம். எதிர்க்கட்சி களின் கருத்துகளைப் பெற்று பின்னர் அதை முன்னெடுத்துச்செல்ல வேண்டும். இச்சட்டங்கள் இப்படியே அமல்படுத்தப்படு மானால், ஊர்வலங்கள் நடத்த முடியாது, பட்டினிப் போராட்டங்கள் நடத்தமுடியாது. முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டுமா அல்லது வேண்டாமா என்கிற முடிவு எடுப்பது இனி போலீஸ் அதிகாரிகள்தான். காவல் அடைப்பு 15 நாள் என்று இதற்கு முன்பு இருந்ததை 60 நாள்கள் முதல் 90 நாள்கள் வரை மாற்றி விட்டார்கள். காவல் நிலைய அதிகாரி நினைத்தால் குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு நபரையும் அவர் நினைத்தபடி இந்த 90 நாள்களில் பேச வைத்துவிட முடியும். ஆகவே இந்தச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும் என்கிறோம். பீகாரின் காரகட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாராம்சிங்கும் அரா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான நானும் சிபிஐஎம்எல் கட்சி சார்பாக உங்களுக்கு ஆதரவு தெரிவிப் பதற்காக இங்கு வந்துள்ளோம். இக்கோரிக்கை களுக்காக நாங்கள் நாடாளு மன்றத்திற்குள் போராடுவோம். நாங்கள் எப்போதும் 24 மணி நேரமும் உங்களுடன் இருக்கிறோம். இருப்போம். ஜெய் பீம், செவ்வணக்கம். ❑

# வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் வேண்டுமா சூரிய ஒளி மின்னுற்பத்தி ?




சூரிய ஒளி மின்னுற்பத்தியில் இந்திய அளவில் 4 வது இடத்தில் உள்ள தமிழ்நாடு, 2030 க்குள் 20,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. இதற்கு ரூ 70,000 கோடி முதலீடும் ஒரு லட்சம் ஏக்கர் நிலப்பரப்பும் தேவைப்படும். இராமநாதபுரம், கமுதியில் அதானி குழுமம் 2,500 ஏக்கர் பரப்பளவில் ரூ 4,500 கோடி முதலீட்டில் 648 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய தொடங்கியுள்ளதை அடுத்து, இது வேகமெடுக்கத் தொடங்கியுள்ளது.என்எல்சி போன்ற நவரத்னா நிலையங்களும் வணிக ரீதியாக சூரிய ஒளி மின்னுற்பத்தியில் இறங்கியுள்ளன.

ஆனால்,பல மாவட்டங்களில் விவசாய நிலங்கள் மீதும், மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளை ஒட்டியும் சூரிய ஒளி மின்னுற்பத்திக் கான முயற்சிகள் தொடங்கியுள்ளன.புதுக்கோட்டை மாவட்டத்தில் 11 சூரிய ஒளி மின்னுற்பத்தி நிலையங்களும் மயிலாடுதுறை மாவட்டத்தில் நான்கு திட்டங்களும் வரவுள்ளன.

கந்தர்வக்கோட்டை அருகிலுள்ள கோமாபுரம் ஊராட்சி, சமுத்திரப்பட்டி சிற்றூரில், கேவி டெக் நிறுவனம் 20 மெகாவாட் மின்னுற்பத்தி செய்ய திட்டமிட்டு வேலைகளை தொடங்கியுள்ளது. ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய ரூ 5 –7 கோடி முதலீடு தேவைப்படும் என்ற வகையில் இது ரூ 100–140 கோடி கொண்ட திட்டமாகும். ஒரு மெகாவாட் உற்பத்திக்கு 5–7 ஏக்கர் நிலப்பரப்பு தேவைப்படும். இந்த திட்டத்துக்கு 100 – 140 ஏக்கர் போதுமென் றாலும் 300 ஏக்கர் வரை நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் விவசாய நிலங்கள் மட்டுமின்றி ஓடை, வாய்க்கால் உள்ளிட்ட பொது நீர்நிலைகள் அபகரிக்கப்படு கின்றன. ஏழு ஏக்கர் புறம்போக்கு நிலமும் கைப்பற் றப்பட்டு அழிக்கப்படுகிறது.

விவசாயம், ஆடு, மாடு, மக்கள் புழக்கம், நீர் ஆதாரம் ஆகியவற்றை இந்த திட்டம் பாதிக்கும்.

ஊர் மக்களது கருத்துகளை கேட்காமலும் மக்களது எதிர்ப்பை பொருட்படுத்தாமலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. ஊர்மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட்சியரிடம் எதிர்ப்பு தெரிவித்து மனு அளித்துள்ளனர். ஆனாலும், ஆளுங்கட்சி ஒன்றிய செயலாளர் தொடர்ந்து இதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். திட்டத்துக்கு பாதுகாப்புக் கேட்டு உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு போட்டுள்ளார். திட்டத்தை எதிர்க்கும் மக்களுக்கு ஆதரவாக குரலெழுப்பும் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் வீமூ வளத்தான் மீது திமுக ஒன்றிய செயலாளர் காவல்நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளார். நீதிமன்ற வழக்கை காரணம் காட்டி போராட்டத்துக்கு தடைவிதிக்கும் அதிகாரிகள், இந்த திட்டத்துக்காக நீர்நிலைகளை ஆக்கிரமிக்க தடைவிதித்துள்ள உயர்நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த மறுக்கின்றனர்.

மயிலாடுதுறை மாவட்டம், நெப்பத்தூர் ஊராட்சியில் 110 ஏக்கர்களில் 20 மெகாவாட் சூரிய ஒளி உற்பத்திக்கான வேலை தொடங்கியுள்ளனர். இதை எதிர்த்து கிராம மக்கள் தொடர்ந்து போராடி வந்தநிலையில், ஜூன்மாதம் மாவட்ட ஆட்சியர்


அலுவலகத்தில் நடைபெற்ற அமைதிப்பேச்சு வார்த்தையில் நெப்பத்தூர் ஊர்பிரதிநிதிகள் அவிகிதொச மாநிலப்பொதுச்செயலாளர் என்.குண சேகரன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் ஊராட்சித்தலைவர் ராஜ்குமார் தலைமையில் கலந்து கொண்டனர். இத்திட்டத்தால் ஏற்படும் பாதிப்பு களை எடுத்துக்கூறினர். வேளாண் பாதுகாப்பு மண்டல சட்டத்துக்கு எதிரானது என்பதையும் வலியுறுத்தினர். இதை ஏற்றுக் கொண்ட ஆட்சியர் இந்த திட்டம் செயல்படுத்தப்படாது என்று அறிவித்துள்ளார்.

அதேபோல, பெருந்தோட்டம் ஊராட்சியில் 1000 ஏக்கர் விவசாய நிலத்தில் 110 மெகாவாட் உற்பத்தி செய்ய திட்டமிடுகின்றனர். முதலில் இந்த நிலத்தில் சிந்தியா நிறுவனம் அனல் மின்உற்பத்தி செய்ய திட்டமிட்டிருந்தது. மக்களது போராட்டத் தாலும் மக்களுக்கு ஆதரவான நீதிமன்ற தீர்ப்பாலும் அந்த நிறுவனம் அந்த திட்டத்தை கைவிட்டு விட்டது. அந்த நிலத்தில்,வோல்டாஸ் பாரத் பிரைவேட் லிமிட்டட் நிறுவனம் சூரிய ஒளி மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிட்டு வருகிறது. அந்த நிலத்தை விவசாயிகளுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று அவிகிதொச தலைமையில் ஊர்மக்கள் போராடி வருகின்றனர். ஜூலை 20 அன்று நடந்த உண்ணாநிலை போராட்டத்தில் 500 க்கு மேற்பட்ட ஊர்மக்கள் கலந்து கொண்டனர். இகக(மாலெ) மாநிலச் செயலாளர், பெண்கள் கழக மாநிலக் குழு உறுப்பினர் மாதவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சூரிய ஒளி மின் உற்பத்தி, விவசாயம் நடக்காத, மக்கள் வசிப்பிடங்கள் இல்லாத தொலை தூர மலை அடிவாரங்கள் பரந்து விரிந்துள்ள தரிசு நிலங்கள்,பாலைவனப் பகுதிகளில்தான் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலக நாடுகளில் இவ்வாறுதான் நடக்கின்றன.

சுற்றுச்சூழல் பாதிப்பு மிகக் குறைவானது என்ற பேரால், மயிலாடுதுறை, புதுக்கோட்டை போன்ற விவசாய மாவட்டங்களில் விவசாய நிலங்களுக்கும் மக்கள்வாழும் பகுதிகளுக்கும் தீங்கு ஏற்படுத்தும் செயலில் அரசாங்கம் ஈடுபடக் கூடாது. இது தொடர்பாக திமுக அரசு தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்கி செயல்படுத்திட வேண்டும். இந்த திட்டங்களை செயல்படுத்தும் பெரும் தொழில் நிறுவனங்கள் பகுதிகளில் உள்ள ஆளுங்கட்சி ஒன்றிய செயலாளர்களை ஏஜண்டுகளாக பயன்படுத்துகின்றனர். கடந்த காலங்களில் இறால் பண்ணைகளுக்கு, மீதேன் திட்டங்களுக்கு நிலம் பறிக்க, மக்கள் எதிர்ப்பை பிளவுபடுத்த இது போன்ற முறையை ஆண்டகட்சிகள் பயன்படுத்தின. விவசாய நிலங்களிலிருந்தும் மக்கள் வாழும் பகுதிகளில் இருந்தும் இதுபோன்ற திட்டங்களை அப்புறப்படுத்த வேண்டும். மின்சாரம் எந்த அளவுக்கு தேவையோ அந்தளவுக்கு விவசாயமும் பாதுகாப்பான மக்கள் வாழிடமும் தேவை. பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் இதுபோன்ற நிலத்தை விழுங்கும் சூரிய ஒளி திட்டங்கள் வேண்டுமா என்பதை ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும். மாறாக விவசாயத்துக்கு தனிநிதிநிலை அறிக்கை வாசிக்கும் மாநில அரசு விவசாயத்தை பாதுகாக்க, புத்துயிரூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் யூகலிப்டஸ் மரங்களை அகற்றுவதன் மூலம் விவசாயத்தை பாதுகாக்க முடியும். இதுபோன்ற கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். அவற்றுக்கு அரசு செவிசாய்க்க வேண்டும். விவசாயத்துக்கு எதிரான சூரிய ஒளி மின்திட்டம் போன்றவற்றுக்கு செவிசாய்க்க கூடாது. அனைத்திந்திய விவசாய கிராமப்புர தொழிலாளர் சங்கமும் அகில இந்திய விவசாயிகள் மகா சபையும் இந்த பிரச்சனையை விவசாய சமூகத்திடமும் அரசிடமும் தொடர்ந்து கொண்டு செல்லும்.

**– என்.குணசேகரன்**



## சி.டி.குரியன் அவர்களுக்கு அஞ்சலி

சிறந்த பொருளாதார அறிஞரும் மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரியின் பேராசிரியருமான சி.டி.குரியன் அவர்கள் தனது 93வது வயதில் காலமானார். நாட்டில் வறுமை ஒழிப்பிற்கான அவரது பங்களிப்பிற்காக அவர் எப்போதும் நினைவு கூறப்படுவார். மாலெ தீப்பொறி அவருக்கு செவ்வஞ்சலியைச் செலுத்துகிறது.

# நிலக் கொள்ளையனுக்கு ஆதரவாக வருவாய் துறையும், நெடுஞ்சாலை துறையும் சிபிஐ எம்எல் துணையுடன் எதிர்த்து நிற்கும் முள்ளிப்பள்ளம் கிராம மக்கள்

வைகையின் வலது கரையில், சோழவந்தானுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள கிராமம் முள்ளிப்பள்ளம். மிக செழுமையான வயல் வெளிகளும், நிலமும் முன்னர் பார்ப்பனர்களின் கையில் இருந்தன. இந்தியாவின் அரசியலில் பெருமளவு பேசப்பட்ட பார்ப்பனர்கள் இக்கிராமத்திலிருந்து புறப்பட்டுவந்தவர்கள்.

1960களுக்குப் பின்பு நிலம் பிற்பட்ட சாதி ஆதிக்க சக்திகளின் கைகளுக்கு மாறியது. திராவிட அரசியல் வெற்றியின் பலனை அறுவடை செய்த பிற்பட்ட சாதிகளின் ஆதிக்க சக்திகள் கிராம அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டனர்.

முள்ளிப்பள்ளத்தின் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த மாரநாடன் என்பவர் தன் கையில் வந்து சேர்ந்த நிலத்தின் மதிப்பை உயர்த்துவதற்காக ஒரு நாடக வழக்கை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்தார். மேலக்கால் முதல் பேரணை வரையிலான கிராமத்துச் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்றும் அதற்காக, 24 கி.மீ நீளமுள்ள சாலையில் முள்ளிப்பள்ளத்தில் உள்ள 800 மீட்டர் நீளத்துக்கு சாலையோரம் அமைந்துள்ள 128 வீடுகளை அகற்ற வேண்டும் என்றார். அந்த வீடுகள் அனைத்தும் சாலையோர ஆக்கிரமிப்புகள் என்று அவர் வழக்கில் தெரிவித்தார். உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பைப் பெற்றுக்கொண்டு வீடுகளை இடிக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நெடுஞ்சாலை துறைக்கு நெருக்கடி கொடுத்தார்.

இப்பிரச்சனை மதுரை மாவட்ட கட்சியிடம் வந்தது. பகுதி மக்கள் கையில் இருந்த வருவாய்த்துறை ஆவணங்களை ஆய்வு செய்த போது பெரும்பகுதி வீடுகள் பட்டா/ பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைக் கொண்டிருந்தன. நெடுஞ்சாலை சர்வே எண்ணைக் குறிப்பிட்டு பட்டா உள்ள வீட்டை இடிப்பதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற முறை கேடுகளைக் கண்டுபிடித்த கட்சி, ஜூலை 1 அன்று நடந்த ஆர்ப்பாட்ட நிகழ்வுக்குப் பின்பு மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து வருவாய் துறை ஆவணங்களின் குளறுபடிகளுக்கான ஆதாரங்களை அளித்தனர்.

இதற்கிடையில் வருவாய் துறையின் ஆவணத்தில் உள்ள தவறுகளை பளிச்சென்று காட்டும் ஆவணங்களைக்கொண்ட, ஆர்வத்துடன் முன்வந்த 3 வீட்டின் உரிமையாளர்கள் மதுரை உயர்நீதிமன்ற அமர்வில் இடிப்புக்கு தடைகோரி வழக்குத் தொடர்ந்தனர்.

முள்ளிப்பள்ளம் குடியிருப்பாளர்கள் 15 07 24 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி இடிப்பு முயற்சியைக் கைவிட வேண்டும் என்று கோரினர்.

பின்னர், வாடிப்பட்டி தாசில்தாரிடம் குளறுபடிகளுக்கு ஆதாரங்களை அளித்து வீடு இடிப்பை நிறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டது. அதே நாள் காலையில் நெடுஞ்சாலை துறையின் இடிப்பு நோட்டீசின் மீதான நடவடிக்கையை இரண்டு வாரம் நிறுத்தி வைக்கும்படியும், அரசு தனது ஆவணங்களை அடுத்த அமர்வில் அளிக்க வேண்டும் என்றும் மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவு அளித்தது.

இருந்தாலும், மாவட்ட நிர்வாகம் இடிப்பு நடவடிக்கைக்கான ஆயத்தங்கள் செய்வதைக் கண்டு நீதிமன்ற உத்தரவைக் காட்டி மாவட்ட நிர்வாகத்தின் பல மட்டங்களிலும் ஆட்சேபணைகளைப் பதிவு செய்தோம். இருந்தாலும் 26 07 24 அன்று தடையாணைக்கு மனு செய்த 3 வீடுகளை விட்டுவிட்டு 125 வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டன.

அன்று மாலை ஊரில் நடைபெற்ற கூட்டத்தில் அரசின் அத்துமீறலுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத்த மக்கள் தீர்மானித்தனர். நேர்மையான ஊடகங்களின் துணையோடு சட்டவிரோதமான, நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான வீடு இடிப்பு செய்தி பரப்பப்பட்டது.

தற்போது, இடிக்கப்பட்ட வீடுகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும், வருவாய் துறை ஆவணங்களின் குளறுபடிகளைத் திருத்த வேண்டும், வீடற்றவர்களுக்கு வீடு வழங்க வேண்டும், நிலப்பறி கும்பலுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் இயக்கம் தொடர்கிறது.

நமது விடாப்பிடியான முயற்சிகளினால் கட்சியின்பால் நேசம் கொண்ட மக்கள் 28 07 24 அன்று நடைபெற்ற தியாகிகள் தின மாநில ஊழியர் கூட்டத்திற்கு நிதி வசூல் செய்து அளித்தது

*மட்டுமல்லாமல், அவர்களின் முன்னணிகள் நிகழ்ச்சியின்போது வந்து கலந்துகொண்டு தேவையான பணிகளைச் செய்தனர். தற்போது 40க்கும் மேற்பட்ட வீடுகளின் ஆவணங்களைத் திரட்டிக்கொண்டு வருவாய் துறையின் பல பத்தாண்டு ஆவண மோசடிகளை அம்பலப்படுத்துவதற்கான சட்ட/ போராட்ட முயற்சிகள் முன்னேறிக்கொண்டுள்ளன. நிலப்பறி கொள்ளையன் மற்றும் அவனது கூட்டத்திற்கு, அவர்களுக்குத் துணையாக இருக்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்குப் பாடம் கற்பிப்போம், நிலப்பறி கொள்ளையர்களை அம்பலப்படுத்துவோம் என்ற முழக்கத்தோடு நமது கட்சி முன்னேறுகிறது. இந்த இயக்கத்தைக் கட்டமைப்பதில் தோழர்கள் ஈஸ்வரி, மங்கையர்க்கரசி, நளினி, முத்துராக்கு முள்ளிப்பள்ளம் கிளைச் செயலாளர் தோழர் மனோகரன், கட்சி உறுப்பினர்கள் பாண்டிக் கண்ணன், போதுமணி, கார்த்திக், ஈஸ்வரன், அருண் உள்ளிட்டவர்கள் மிகப்பெரும் பங்காற்றினர்.*

**–சி.மதிவாணன்**

## பங்களாதேஷ் நிலைமைகள் பற்றி இகக(மாலெ) மத்தியக் குழு அறிக்கை

ஹசினா அரசாங்கம், பங்களாதேஷின் பிரபலமான ஒதுக்கீடு சீர்திருத்த இயக்கத்தின் மீது முழுமுற்றான வன்முறையை ஏவி, நசுக்க எடுத்த முயற்சிகளை அடுத்து, ஷேக் ஹசினா பதவி விலகவும் அவரது சுயேச்சாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டவும் போராடிய மாணவர் இயக்கம் ஒரு மக்கள் எழுச்சியாக வளர்ந்துள்ளது. அவரது பதவி விலகலும் நாட்டை விட்டே அவர் வெளியேறியுள்ளதும் பங்களாதேஷ் மக்களின் கோபத்தையும் அறுதியிடலையும் நியாயப்படுத்தியுள்ளது. ஜனநாயகத்தை நேசிக்கும் பங்களாதேஷ் மக்களை, அவர்களது இந்த வெற்றிகரமான அறுதியிடலின் தருணத்தில் வாழ்த்துகிறோம்.

பங்களாதேஷ் தற்போது ஒரு கொந்தளிப்பான மாறிச் செல்லும் கட்டத்தில் உள்ளது. அவாமி லீக் தலைவர்கள், அலுவலகங்கள், ஷேக் முஜிபுர் ரஹ்மான் சிலைகள் மீது நடந்துவரும் தாக்குதல்கள், சூறையாடல், கலவரம் பற்றிய கவலை தரும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களும் உள்ளன. அதே சமயம், இயக்கத்தை நடத்திவரும் சக்திகள், சூழ்நிலையின் சவால்கள் குறித்து கவனமாக இருப்பதும் சிறுபான்மை மக்களின், சாமான்ய குடிமக்களது உயிர், உடமைகளை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்து வருவது நம்பிக்கையூட்டுவதாகவும் உள்ளது. பங்களாதேஷிலிருந்து வரும் தகவல்கள், அங்கு இடைக்கால அரசு குறித்தும் அதன் முதன்மை ஆலோசகராக பழம்பெரும் பொருளாதார நிபுணர், நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் இருக்கலாமென்றும் குறிப்பிடுகின்றன.

பங்களாதேஷ் மக்கள், நீண்டகால சீர்குலைவு, அராஜகத்தை தவிர்த்து, ராணுவ ஆட்சியின் இடர்ப்பாடுகளையும் அடிப்படைவாத சக்திகளின் கைப்பற்றுதலையும்துடைத்தெறிந்து, மாற்றம், ஜனநாயக த்துக்கான போராடிவரும் மக்களது அவாக்களையும் அறுதியிடலையும் கடத்திச் செல்ல அடிக்கடி முயலும் ஏகாதிபத்திய தலையீட்டை முறியடித்து, தங்கள் விடுதலைப் போரின் குறிக்கோள்களை நோக்கி முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கையை இந்தியாவில் உள்ள ஜனநாயக சக்திகள் பகிர்ந்து கொள்கின்றனர். இந்திய அரசாங்கம், நட்புறவு, ஒத்துழைப்பு உணர்வின் அடிப்படையில் பங்களாதேஷ் மக்களது இறையாண்மை தேர்வை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இந்தியாவின் அரசியல், சமூக சூழலை சீர்குலைக்கும் வகையில், பங்களாதேஷ் நிலவரம் பற்றி இந்திய ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் ஏராளமான தவறான பரப்புரை பரப்பப்பட்டு வருகிறது. நாம் விழிப்புடன் இருந்து இந்த பரப்புரைப் போரை எதிர்த்துப் போராட வேண்டும்.

புதுதில்லி, 6 ஆகஸ்ட் 2024

**மத்தியக் கமிட்டி,**
**இகக(மாலெ) விடுதலை**



### புத்ததேவ் அவர்களுக்கு அஞ்சலி

மேற்கு வங்கத்தில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த இடது முன்னணி அரசின் கடைசி முதல்வர் புத்ததேவ். அவருடைய ஆட்சியின் மீதான விவாதங்கள் தொடரும். ஆனால், அவருடைய நேர்மைக்கும் எளிமையான வாழ்க்கைக்கும் அவர் என்றென்றும் நினைவு கூரப்படுவார்.

**- திபங்கர், பொதுச் செயலாளர், இகக(மாலெ)**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.08.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மக்கள் விரோத ஒன்றிய நிதிநிலை அறிக்கையைக் கண்டித்து இடதுசாரிகள் மறியல் போர்


















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh